பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 2-00 | 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 யாழ்ப்பாணம் | சித்திரை 14 ஷப்பா 17 ஞாயிற்றுக்கிழமை | இதழ் 75 (27—4—86)

சந்நிதி பூசகர் கொலை:

## ரூபவாஹினியில் தோன்றிய ஐயர் விசேட மகஜர்!

[யாழ்ப்பாணம்]

''தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோவிலுக்கு பூஜைசெய்து வந்த 10க்கு மேற்பட்ட பூசகர்களுள் நானும் ஒருவர். கடந்த 24ம் திகதி 'ரூபவாஹினி'யில் சுட்டுக் கொல்லப்பட்ட சின்னையா ஐயர் உயிருடன் இருப்பதாக எனது உருவத்தை வட்டமிட்டுக்காட்டியது உண்மைக்குப்புறம்பானதாகும்''

இவ்வாறு செல்வச்சந்நிதி கோவில் பூசகர்களில் ஒருவரான பாலேந்திரா ஐயர், யாழ். அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்துள்ள விசேட மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: [11ம் பக்கம் பார்க்க]

பேச்சுக்கள் தோல்வியுற்றால்........

# போராளிகளின் 'தனிநாடு' நிலைப்பாட்டை ஏற்கநேரிடும்!

## ராய்ட்டருக்கு 'அமிர்' பேட்டி

(ராய்ட்டர்)

''இலங்கை இனப்பிரச்னைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகள் தோல்வியடைந்தால் 'தனிநாடு தான் முடிந்த முடிவு' என்ற தமிழ்ப்போராளிகளின் நிலைப்பாட்டினை ஆதரிக்க வேண்டிவரும்'' என்று இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

புதுடில்லியில் ராய்ட்டர் செய்தி ஸ்தபானத்துக்கு திரு அமிர்தலிங்கம் நேற்றுப்பேட்டியளித்தார். அப்பேட்டியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

திரு, அமிர்தலிங்கம் மேலும் கூறியிருப்பதாவது: ''வடக்கு-கிழக்கு தமிழ்ப் பிரதேசங்கள் ஒன்றாக இணைந்த ஒரு மநில சுயாட்சி முறையையே தமிழர் விடுதலைக்கூட்டணி வலியுறுத்திவருகின்றது.

''இந்தசுயாட்சியானது,உள்ளூர் பொலிஸ்சேவை, கல்வி, சட்டம் - ஒழுங்கு, பொருளாதார அபிவிருத்தி, கலாசார அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய அதிகாரங்களைக் கொண்டதாகஅமைய வேண்டுமென த. வி கூ. திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இலங்கை இனப்பிரச்னை குறித்த சமரசப் பேச்சுக்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்குறிப்பிட்ட அதிகாரங்களின் அடிப்படையிலேயே தனது நிலையைத் தெளிவாக்கியுள்ளது.

[11ம் பக்கம் பார்க்க]

## யாழ் வந்த தனியார் பஸ்ஸில் மகப்பேறு

[யாழ்ப்பாணம்]

நேற்று இரவு 10 30மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பஸ்ஸில் [சேவ்ரி] இரவு 2.30 மணியளவில் தாயொருவர் பெண்குழந்தையொன்றினைப் பெற்றெடுத்தார். இம்மகப்பேறு நீர்கொழும்புக்கும் புத்தளத்திற்குமிடையில் நடந்தது.

பஸ் சாரதி தாயையும் சேயையும் புத்தளம் அரசினர் [11-ம் பக்கம் பார்க்க]

நடைக்களைப்பினால் மயங்கியவர்கள்

## சுடப்பட்டனர்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மொறக்கட்டாஞ்சேனைக்கு மேற்குப்பக்கமாகவுள்ள தரவை என்னுமிடத்தை ஆயுதப்படையினர் திடீரென சுற்றிவளைத்து சுமார் 60 பேரைக் கைது செய்துள்ளனர்

[11ம் பக்கம் பார்க்க]

மரக்காலையில் பல லட்சம்—

## பெறுமதியான பொருள்கள் ஆயுதநபர்களால் கொள்ளை!

[யாழ்பபாணம்]

லொறிடயர்கள், உதிரிப் பாகங்கள், மரப்பலகைகள், மரவேலைக்குரிய கருவிகள், டீசல் என்பன உட்பட கோவிலுக்குரிய ஒரு தொகைப் பணமும் யாழ் நகரின் மத்தியில் உள்ள மரக்காலையொன்றில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இவற்றின் பெறுமதி பலலட்சமெனத் தெரிகிறது.

யாழ். மின்சார நிலைய வீதியில் உள்ள வைத்தியலிங்கம் மரக்காலையிலேயே நேற்றுமுன் தினமிரவு 12 மணிக்கு இக்கொள்ளை நடந்துள்ளது.

துப்பாக்கிகளுடன் வந்த பத்துக்குமேற்பட்ட நபர்கள் மேற்படி மரக்காலை மதிற்சுவரால் ஏறி உள்ளே சென்று [11-ம் பக்கம் பார்க்க]

## இலங்கை அ தி.மு.க பொது செயலாளர் கடத்தப்பட்டார்

[யாழ் பாணம்]

இலங்கை அண்ணா தி மு க பொதுச் செயலாளரும் வர்த்தகருமான திரு. பான் மதிமுராசா இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை வண்ணை சிவன் கோவிலுக்கண்மையிலுள்ள அ தி.மு.க. அலுவலகத்தில்வைத்து இவர் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாவடியைச் சேர்ந்த திரு பான். மதிமுகராசா அண்ணா தி.மு க. தலைமையிலான 15 வெகுஜன அமைப்புக்களின் அமைப்பாளரும், யாழ் வர்த்தக சங்க உறுப்பினரும், தனியார் பேரூந்து சங்கத் தலைவருமாவார். [மா]

கடற்படை தாக்குதல்:

## படகு சேதம்; மூவர் கைது ஆயுதங்கள் சிக்கின

[கொழும்பு[

''காரைநகர் கடற்படையினரால் கடந்தவியாழனன்று கடலில் படகொன்று சேதப்படுத்தப்பட்டு அதிலிருந்த மூவர் கைது செய்யப்பட்டனர்'' என்று அரசபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

கைது செய்யப்பட்ட மூவரும் தமிழ்நாடு சேலம் மாவட்டத்திலுள்ள 'ரெலோ' முகாமில் 10 மாதகாலப்பயிற்சியை முடித்துவிட்டு இலங்கை திரும்பிக்கொண்டிருக்கையில், கடற்படையினரால் படகு தாக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக

### அரசவட்டாரங்கள் தகவல்

''எஸ் ராஜன். கே. தீபன், ஐ ரவி ஆகிய மூவரும் கைதானார்கள் இவர்களை விசாரணைக்குட்படுத்தியபோது தங்கள் தலைவன் ரஜால் உட்படப் பத்துப்பேர் பலியானதாகக் கூறினார்கள். ரஜால் உத்திரப்பிரதேசத்தில் பயிற்சி பெற்றவர் என்றுகூறிய அரச பாதுகாப்புப்படை வட்டாரங்கள் சேதப்படுத்தப்பட்ட படகில் இருந்து பத்து ரைபிள்கள், எஸ் எம் ஜி துப்பாக்கி, ஆயிரம் சுற்றுககள்கொண்ட வெடி மருந்து 10 கைக்குண்டுகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவித்தன.

## மட்டக்களப்பு - பட்டிருப்பு பாலம் குண்டினால் தகர்ப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புக்குத் தெற்குப்பக்கமாகவுள்ள பட்டிருப்பு பாலம் இனந்தெரியாத நபர்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது

240 அடி நீளமுள்ள இப்பாலத்தில் சுமார் 30 அடி நீளப் பகுதி குண்டுத் தகர்ப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பாலம் தகர்க்கப் பட்டதால் மட்டக்களப்புக்கும் பெரியபோரதீவு, பழுகாமம், மண்டூர், திருகோடை, வெள்ளாவெளி, பாலையடிவெட்டை ஆகிய கிராமங்களுக்குமிடையேயான போக்குவரத்துச் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. [மா]

தவறுதலாக

## துப்பாக்கி வெடித்ததில் தமிழ் கான்ஸ்டபிள் மரணம்

[வவனியா]

கொலைச் சம்பவமொன்று தொடர்பான புலன் விசாரணைக்குச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் துரைராசா என்பவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவர்மரணமானார்.

அனுத்கம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் திரு துரைராசா கிளிநொச்சியைச் சேர்ந்தவராவர் இவரின் சடலம் அனுராதபுரத்திலிருந்து கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்டு அவரது மனைவியிடம் கையளிக்கப்பட்டது [வா]

### தெல்லிப்பளையில் நடந்த கொள்ளையைக் கண்டித்து வழிமறிபபுப் போராட்டம்

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பளையில் பொறியியலாளர் வீட்டுல் நடந்த கொள்ளையை கண்டித்து நேற்று தெல்லிப்பளையில் வழிமறிப்புப் போராட்டம் இடம் பெற்றது.

[11-ம் பக்கம் பார்க்க]

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எட்டு வாரங்கள் நிரம்பிய அழகான ''போமறேனியன்'' (ஆண் 1, பெண் 2) நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. Wormed and Weaned. தொடர்புகொள்ளுங்கள்:- 153, ஆஸ்பத்திரி வீதி, சென். பீற்றஸ் லேன், யாழ்ப்பாணம். [C-2020]

ஒரு மாத Pure bred அல்சேசன் கறுப்பு நரை நிற நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு (Pedigree available). 58, சங்கிலியன் வீதி, நல்லூர். [C-2018]

நல்ல நிலையிலுள்ள Fisher டெக் விற்பனைக்கு உண்டு. அத்துடன் றேசிங் சயிக்கிலும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சந்திரன் மோட்டார் கராச், வீரமாகாளி அம்மன் கோவிலடி. [C-2010]

நல்ல நிலையிலுள் 84 ஸ்ரீ 5948 Honda SS 1 மோட்டார் சய்க்கில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- நல்லூர் நூலகம் அருகாமையில் உள்ள ஒழுங்கைக்குள் ஜெ. ஜெகதீசன், 131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அல்லது நல்லூர் இந்து விடுதி தேனீர்ச்சாலை. [C-2011]

சுன்னாகம் இலங்கை வங்கிக் கருகாமையில் 2 அறைகளுடன் வீட்டுடன் கூடிய ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- பொ. வடிவேலு, 136, பிரதான வீதி, சுன்னாகம். [C-1952]

''புறொயிலர்'' இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு தொடர்பு: கு. இராசரத்தினம், ஆனந்தநிலையம், நவிண்டில், கரவெட்டி. (C1936)

Hitachi ரீ. வி. (TV) 20'' கலர் மற்றுஸ் அன்ரனு 40' பைப்பு, பூஸ்ரர் வயர் உடன் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்ளவும். அபிராமி, மரக்காலை, க. சிவயோகநாதன், 175, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். [C 2019)

1986-87 அக்ஷய வருஷ எல்லா இராசிபலன்களும், ஆத்மஜோதி தத்துவஞான விளக்கங்களும். விலை 3/- எங்கும் கிடைக்கும். நூலாசிரியர் (ஆத்மஜோதி)சத்தியதாஸன், கமலா வாச்வேக்ஸ், காங்கேசன்துறை. [C2013]

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1837]

வலம்புரிச்சங்கு - தெய்வீகத் தன்மை வாய்ந்த வலம்புரிச் சங்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமம், ஆயர்பாடி ஒழுங்கை, தெல்லிப்பழை. (C-1891)

திருநெல்வேலி தெற்கில் யாழ். வளாகத்திற்கு அண்மையில் உன்னதமான சூழலில் 2½ பரப்புக்காணியில் சகல வசதி கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். எஸ். தெட்சணாமூர்த்தி, Bata Fancy Emporium, 78, கஸ்தூரியார் றோட்டு, யாழ்ப்பாணம். (C 1930)

## விற்பனைக்கு

மலிவான விலையில் பின்னல் கதிரைகள், ஆங்கிலத் தட்டெழுத்து இயந்திரம் விற்பனைக்குண்டு. ஹரி ஹரன் என்ரபிறைஸ், 337, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். C-2024]

கறுப்பு இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு 51, விதானையார், வீதி, சுண்டுக்குளி. [C-1982]

வெளிநாடு செல்லும் என்ஜினியரின் குளிர்சாதனப் பெட்டி, அலுமாரி, கட்டில்கள், Vono Spring Beds, Dressing Table, எழுது மேசைகள், Show Case, சாப்பாட்டு மேசைகள், ஹோல் செற்றி, தேக்கு தளபாடங்கள், pyrex Dinner Set, Cut glass, சில்வர் பாத்திரங்கள், கசற் றேடியோ, Iron, கம்பளங்கள் உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கு மிடையில். [C-1953]

அராலி மேற்கில் கிணறு, தென்னை, பனை, மின்சாரவசதிகளுடன் அமைதியான சூழ்நிலையில் 17 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடுகட்ட அல்லது மில் நடாத்தவோ உகந்தஇடம். தொடர்பு: சி. வவசோதி, அராலி மேற்கு, சிட்டுக்கொட்டை. [C 1960

## காணவில்லை

எட்டு முக்கிய திறப்புகள் அடங்கிய சாவிக் கோர்வை யாழ். நகருக்குள் (முக்கியமாக ஆஸ்பத்திரி வீதியில்) 2 தினங்களுக்குமுன் தவறிவிட்டது. கண்டெடுத்தோர்தயவுசெய்து கீழ்க்கண்டவிலாசத்தில் சேர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும். ஜீவா (B)பாங்கில் ஸ்டோர்ஸ், 8, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 1998)

யாழ்ப்பாணம் சாட்டி வீதியில் 1 Sri 2669 இலக்கமுடைய கார் தகடு தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் தொழில்நுட்பநிறுவனம், வங்களாவடி, வேலணை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 1970)

## வகுப்புகள்

நீர்வேலியில் பிரத்தியேக ஆங்கில மொழி வகுப்புகள் ஆரம்பம்: 28-4-86 காலை 9 மணி. கற்கைநெறிகள்: G. C. E. O/L Special English, N. C E TOFEL தொடர்பு: த. ந. பஞ்சாட்சரம்' நீர்வேலி. [C 1990]

## புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

நீண்ட காலமாக குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு சீர்கெட்ட நிலையில் இருந்து வந்த பண்டத்தரிப்பு சித்தன் கேணி பிரதான வீதியும் சங்கானை சித்தன்கேணி பிரதான வீதியும் நெடுஞ்சாலை திணைக்களத்தினுல் அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

## இன்று

[சுழிபுரம்]

சுழிபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்றுஞாயிற்றுக் கிழமை சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன்பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கிராம முன்னேற்ற சங்கத்தினர் கிராம பொது வேலைகளில் அதிக கவனம் எடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.

## தேவை

நல்ல நிலையிலுள்ள ''டைப் பிறிசர்'' உடனடியாகதேவை வைத்திருப்போர் உடன் தொடர்புகொள்க. பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (C1945)

ஆண் அல்லது பெண் வெளிக்களப் பணியாளர் தேவை. விண்ணப்பங்களுடன் 30-04-86 க்கு முன்பு நேரில் வரவும். ஹரிஹரன் என்ரபிறைஸ், 337, பலாலிவீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். C-2023

ஓமானிலிருந்து பிரசவத்திற்கென நான்குமாத விடுமுறையில் வரும் டாக்டர் தம்பதிகளின் இரண்டு வயதுக்குட்பட்ட மூன்று குழந்தைகளை விடுமுறைக்காலத்தில் கவனிக்கக்கூடிய பணிப்பெண்களிருவர் தேவை. எதிர்பார்க்கும் சம்பளவிபரத்துடன் 03-05-86 க்குமுன்னர்விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C-2030, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C-2000

G. C. E. (O/L), (A/L வகுப்புகளிற்கு விஞ்ஞான, வர்த்தக பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும்விண்ணப்பிக்கலாம். பிரத்தியேக ஆசிரியர், No 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி. C-1996

முல்லைத்தீவில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கிறீம் ஹவுஸ் ஒன்றிற்கு ரீமேக்கர், சப்பிளேயர், மற்றும் சிற்றுண்டி, ஐஸ்கிறீம் தயாரிப்பதில் அனுபவமுடையவர்கள் 1-5-86க்கு முன்னர் நேரில் வரவும். முகவரி: எஸ். உதயகுமார், ஈஸ்வரி றேடர்ஸ், முல்லைத்தீவு. [C-2009]

மிருகவைத்தியர்-1, மிருக வைத்திய உதவியாளர்-1. ஓட்டோமொபைல் / மெக்கானிக்கல் என்ஜினியர் (டீசல் பெற்றோல்)-1, ஓட்டோ மொபைல் மெக்கானிக் (டீசல், பெற்றோல்)-1, வெல்டர் (சகல வெல்டிங் வேலைகளிலும்)-1. 2வருடங்கள் சேவை, விரைவில் சந்திக்கவும், டாக்டர் த. விஸ்வநாதன், 'ராஜஸ்தான்' கீரிமலை வீதி, சண்டிலிப்பாய் C-2021

## பொலனறுவையில் ரயிலைநோக்கி கல்வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து நேற்று முன்தினம் கொழும்புநோக்கிச் சென்ற ரயிலைநோக்கி கற்கள் வீசப்பட்டதால் பல பிரயாணிகள் காயமடைந்தனர்.

பொலனறுவையில் வைத்து கற்கள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேவை

தட்டச்சு இயந்திரம் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு. Fudo Enter prises, 39/17, மின்சார நிலைய வீதி, [3-ம் ஒழுங்கை] யாழ்ப்பாணம். [C-1961]

## கல்வி

A/L 87-88 கலை / வர்த்தக வகுப்புக்கள் பிரிவு 'B' ஆரம்பம் 07-05-1986. Modern Education Centre, Karaveddy. [C 1845

G. C. E. [O/L]ல் கட்டாய பாடமாகிய கணிதத்தில்சித்தியெய்தாதவர்களுக்கு 17 வருட அனுபவமுள்ள ஆசிரியரினுல் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு நுணுக்கமான முறையில் வீடுகளில் சென்று கற்பிக்கப்படும். மற்றும் (O/L),(A/L) சகல பாடங்களும் பட்டதாரி ஆசிரியர்களினுல் கற்பிக்கப்படும். கடிதத் தொடர்புகொள்ளவும், அல்லது காலை 8-00 மணிக்குள் வீட்டில் சந்திக்கவும். ஆறுமுகநாதன், No 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குழி. (C1997)

புங்குடுதீவு-நயினுதீவு ப. நோ. கூ. சங்கம்

## சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர் தரம் III

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணம்பிக்க விரும்புவோர் விண்ணப் பப்படிவங்களை புங்குடுதீவு - நயினுதீவு ப. நோ கூ. சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும். புங்குடுதீவு-நயினுதீவுப் பகுதியில் வசிப்போர் மாத்திரம் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கவும். முடிவு திகதி 15-05-1986.

பொதுமுகாமையாளர்.
புங்குடுதீவு-நயினுதீவு
ப.நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு.

புங்குடுதீவு.
25-04-1986.

[A 623]


## உங்கள் உற்பத்திப் பொருள்களை இருபத்திநான்கு மணிநேரத்தில் விநியோகிக்க வேண்டுமா?

எமது நிறுவனத்தின் விநியோகப் பிரிவில் கடமையாற்றும் சுமார் 60 பெண்கள் தினசரி ஒவ்வொரு வாடிக்கையாளர்கள் இல்லம் சென்று உற்பத்திப் பொருள்களை விநியோகம் செய்துவருகின்ருர்கள். இன்று பல நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை எங்கள் விற்பனைப் பிரிவின் மூலம் விநியோகம் செய்து நன்மை அடைந்துள்ளார்கள். நீங்களும் உங்கள் பொருள்களை விநியோகம் செய்ய உடன் தொடர்பு கொள்ளவும்.

றொப்பலர் இன்ரநஷனல்,
இல. 95, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[A-451]


ரயிலில் பாதுகாப்புக் கடமையிலீடுபட்டிருந்த கொமாண்டோப் பொலிசார் கற்களைவீசிய கோஷ்டியினர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததால் அவர்கள் தப்பி ஓடினர். (மா)

## நள்ளிரவில் கொள்ளை

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு 5-ம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகேசு என்பவரின் வீட்டில் புகுந்த இனந்தெரியாத சில வாலிபர்களினுல் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான வாகனமும், நகைகளும், பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி 10 இலட்சம் ரூபாவுக்கு மேல் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இப்பகுதியில் நீண்ட நாட்களின் பின் மீண்டும் இப்போது கொள்ளைகள் நடைபெற ஆரம்பித்துவிட்டன. இதனுல் மக்கள் மத்தியில் இரவு வேளைகளில் பதற்றம் நிலவிவருகின்றது.

## மக்கள் அவை

[யாழ்ப்பாணம்]

யாழ் நகர் ஜீ எஸ். 26 மக்கள் அவையின் அங்குரார்ப்பணக் கூட்டம்அண்மையில் ஓ. எல். ஆர். வித்தியாசாலையில் நடைபெற்றது. பின்வருவோர் குழுக்கள் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

சமாதானக்குழு: திரு. அ, அன்ரனி, விழிப்புக்குழு: திரு பீ. எதிர்மனசிங்கம், உணவு உற்பத்திக்குழு: திரு. ஜே.ஈ. ரீ கிறிஸ்தோபர், சுயபொருளாதாரக்குழு: திரு. ஆர். ராமச்சந்திரன், தகவல்குழு: திரு.ஏபிரகாம், மாதர் அமைப்புக்குழு: திருமதி நீற்ரு நீக்கிலாஸ்: கல்வி ஆலோசனைக் குழு: திரு பி. கனகசிங்கம். மத்தியகுழுத்தலைவராக டாக்டர் கி, செபஸ்தியாம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டதுடன் மூன்று அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## வீதி திருத்த நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

யாழ் அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பகுதியிலுள்ள ஆறு வீதிகளை திருத்துவதற்கு இவ் வருடத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் மொத்தம் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதி, சென் செபஸ்தியான் வீதி, ஏழு புளியடி ஒழுங்கை, பத்திமா வீதி, தலைவாசால் வீதி, பூம்பத்தை வீதி ஆகிய ஆறு வீதிகளை திருத்துவதற்கே மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## விசர்நாய்க்கடி தடுப்புத்திட்டம்

[பண்டத்தரிப்பு]

யாழ் மாவட்டத்தில் அதிகரித்துவரும் விசர்நாய்கடி நோயைத் தடை செய்வதற்கு வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பு ஊசி மருந்து ஏற்றும் திட்டத்தின்கீழ் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4120 நாய்களுக்குத் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த பண்டத்தரிப்பு, மானிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி, ஆனைக்கோட்டை ஆகிய ஏழு பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பிரிவுகளில் வைத்து இந்த தடுப்பு ஊசி மருந்துகள் அவ்வப்பகுதிபொது சுகாதார பரிசோதகர்களின் அனுசரணையுடன் ஏற்றப்பட்டன.

# லிபியாமீதான தாக்குதல் மாஸ்கோ கண்டனம்

[மாஸ்கோ]
லிபியாவை அமெரிக்க விமானங்கள் தாக்கியதை சோவியத் யூனியன் வன்மையாகக் குறைகூறியுள்ளது. இதனால் மத்தியதரைக் கடல் பகுதியில் நிலைமை மோசமடைந்திருக்கிறது என்று சோவியத் வெளியுறவு மந்திரி திரு. ஷெவாஸ் நாஸ்ஸே கூறினார்.

நேற்று மாஸ்கோவில் செக் கோஸ்லாவாக்கிய வெளியுறவு மந்திரியை கௌரவித்து வழங்கிய அரசு விருந்தில் திரு. ஷெவாஸ் நாஸ்ஸே பேசும் போதே இதனைத் தெரிவித்தார். (து)

உலகச் செய்திகள்

## விமானப் பயிற்சி பெறும் லிபிய மாணவருக்கு பிரிட்டனில் கட்டுப்பாடு

[லண்டன்]
பிரிட்டனில் விமான வான் பரப்புத்துறை பயிற்சிபெற்று வரும் 300 க்கும் மேலான லிபிய மாணவர்கள் மேற்பார்வையின்றி விமானங்களைப் பயன்படுத்தக்கூடாது என தற்பொழுது தடைவிதிக்கப் பட்டுள்ளது.

விமான ஓட்டுனராகப் பயிற்சி பெறும் மாணவர்கள் தனியாக விமானத்தை ஓட்டக் கூடாது எனவும் பொறியியலாளராகப் பயிற்சிபெறும் மாணவர்கள் பயணிகளாக மட்டுமே விமானங்களில் செல்லமுடியும் எனவும் இத்தடையுத்தரவுவிதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத்தடைகள் காரணமாக லிபிய மாணவர்கள் தங்கள் பயிற்சியை பூர்த்திசெய்ய முடியாது என்றும் இன்னும் சில வாரங்களில் இவர்கள் பிரிட்டனைவிட்டு வெளியேறி விடுவார்கள்என்றும் நம்பப்படுகிறது. [து]

## மே.ஜெர்மன் பிரதமர் புதுடில்லி விஜயம்

[புதுடில்லி]
மேற்கு ஜேர்மன் பிரதமர் டாக்டர் ஹெல்மட் ஹோல் நான்குநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று புதுடில்லி வருகிறார்.

பெரியதொழில் அதிபர்களும் வங்கி அதிகாரிகளும் அவருடன் வருகிறார்கள்.

பொருளாதார மற்றும் விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறைகளில் இந்திய மேற்கு ஜேர்மன் ஒத்துழைப்பிற்கு நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று மேற்கு ஜெர்மன் தூதுவர் தெரிவித்துள்ளார்

டாக்டர் ஹோல் இந்திய தலைவர்களுடன் நடத்தும் பேச்சுவார்த்தையில் பயங்கரவாத பிரச்னை முக்கிய இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பயங்கரவாதிகளை நாடு திருப்பியனுப்புவதற்கான உடன்படிக்கையொன்றை இந்தியாவுடன் செய்து கொள்ள மேற்கு ஜெர்மனி விரும்புகிறது.

## "இலங்கை இனப்பிரச்னை: எப்படியும் இம்முறை முடிவுகாணப்பட வேண்டும்"

அ. அமிர்தலிங்கம்

[ராய்ட்டர்]
இந்திய அமைச்சர் திரு. பி. சிதம்பரம் தலைமையில் இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவரும் இந்தியக் குழுவினரின் முயற்சி தோல்வியுற்றால் இந்தியா நேரடியாக இப் பிரச்னையில் தலையிடவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அமிர்தலிங்கம் புதுடில்லியில் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வு காண்பதிலேயே அக்கறை கொண்டுள்ளது. எப்படியும் இம்முறை நடைபெறும் பேச்சுக்கள் மூலம் முடிவு காணப்படவேண்டும் என்றும் இப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் இந்தியா ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும். அது ராஜீகரீதியிலும், நேரடித் தலையீடாகவும் இருக்கலாம் என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவிவழங்கும் உலகநாடுகள் இனப்பிரச்னைக்கு தீர்வுகாண இலங்கை அரசை வற்புறுத்துமாறும், ஆயுத உதவிகள் வழங்கும் இஸ்ரேல், தென்னபிரிக்க முதலிய நாடுகளையும் இவ்விடயத்தில் இலங்கையை வலியுறுத்துமாறும் திரு. அமிர்தலிங்கம் கேட்டுள்ளார். (இ-து)

## இடமாற்றம் பெற்ற 324 ஆசிரியர்களுக்கு கல்விப்பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
பத்து வருடங்களுக்குமேல் வெளிமாவட்டங்களில் ஆசிரியப்பணியாற்றி விட்டு யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடம் பெற்றுள்ள ஆசிரியர்களின் வசதிக்கேற்ற பாடசாலைகளைக் கொடுப்பதற்கு யாழ் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்த 324 ஆசிரியர்களையும் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கல்விப்பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

இடம் மாற்றம் பெற்றுவந்துள்ள ஆசிரியர்களின் வசதிக்கும் தராதரத்திற்கும் ஏற்ற வகையில் பாடசாலைகளை கல்வித்திணைக்களத்துக்குத் தெரியப் படுத்துவதற்காகவே கல்விப்பணிப்பாளர் இந்த ஆசிரியர்களை அழைத்துள்ளார். [வா]

## சுவாமிநாதன் மீண்டும் தெரிவு

(சென்னை)
தமிழ்நாடு சட்டமேலவையின் துணைத்தலைவராக திரு. ஜி. சுவாமிநாதன் நேற்று போட்டியின்றிமீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

இப்போது நியமன உறுப்பினராக இருக்கும் இவர் மூன்றுவது தடவையாக துணைத் தலைவர் பொறுப்பை ஏற்றுள்ளார்.

## விழிப்புக் குழு

(வேலணை)
வேலணையில் வெகு ஜன விழிப்புக் குழுவொன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் படவிருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை கவிஞர் சு வில்வரத்தினம் செய்துவருகின்றார்,

## யாழ். இந்து க பொ. த (சா த) பெறுபேறுகள்

[யாழ்ப்பாணம்]
அண்மையில் வெளியான க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைப்பெறுபேறுகளின்படி யாழ் இந்துக்கல்லூரியில் 183 மாணவர்கள் க. பொ, த உயர்தரம் பயில்வதற்கு தகுதி உடையவர்களாக காணப்பட்டுள்ளனர்

மேற்படி கல்லூரியிலிருந்து க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 208 மாணவர்களும் 466 விஷேட சித்திகளைப் பெற்றுசாதனைநிலை நாட்டியுள்ளனர். (வா)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
பண்டிதமணி அவர்கள் பிறந்த தனங்களப்புக் கிராமத்தை ஒருமுன்மாதிரிக்கிராமமாக்கும் முயற்சியில் தென்மராட்சி மக்கள் முனைந்து செயற்படுகின்றனர் இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று இன்றுஞாயிற்றுக்கிழமை காலை தனங்கிளப்பு தமிழ்ப் பாடசாலையில் நடைபெறவுள்ளது இக் கூட்டத்திற்கு குடாநாட்டிலிருந்தும் ஏனைய பகுதியிலிருந்தும் பல பிரமுகர்கள் அழைக்கப் பட்டுள்ளார்கள் என ஆத்மஜோதி நா. முத்தையா தெரிவிக்கின்றார்.

பண்டிதமணியும் அவரது தாயாரும் பிறந்ததும் பண்டிதமணி அவர்கள் தமது 18 வயது வரை வாழ்ந்ததும் தனங்கிளப்புக் கிராமமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலோலி ப.நோ.கூ.ச.வுக்கு சொந்தமான பவுசர் இல்லை

### பொதுமுகாமையாளர் கருத்து

[புலோலி]
புலோலி ப நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான பவுஸர் இல்லை. வாடகைக்கு அமர்த்தியே எரிபொருட்கள் பவுசர் மூலம் கொண்டுவரப் படுகின்றன.

இவ்வாறு புலோலி ப. நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர் திரு. எஸ். அருணகிரி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அண்மையில் அநுராதபுரம் எரிபொருள் சாலையில் நடைபெற்ற விபத்தில் புலோலி ப நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான பவுசர் சம்பந்தப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டிருந்தது. புலோலி ப. நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமாகபவுசர்கள் இல்லை. வாடகைக்கு அமர்த்தியே எரி பொருட்கள் வருவிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் அனுமதியுடன் பதிவுசெய்யப்பட்ட பவுசர்களே வாடகைக்கு அமர்த்தப் படுகின்றன. 20-ம் திகதி எரி பொருள் ப. நோ கூ. சங்கத்திற்கு வருவிப்பதற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. இ நடராசா என்பவருடைய பதிவு செய்யப்பட்ட பவுசரே வாடகைக்கு அமர்த்தப்பட்டது.

## 'தேசியக்கலைகளைவளர்ப்பதில் முழுமூச்சாக உழைத்தவர்'



திரு. இளையதம்பி

[மாவிட்டபுரம்]
"அரச கூட்டுத்தாபன ஊழியராக இருந்தபோதும் தேசியக் கலைகளை வளர்ப்பதை தன் உயிர்மூச்சாகக் கொண்டு விளங்கும் திரு. இளையதம்பி தொடர்ந்தும் தேசியக் கலைகளை வளர்ப்பதில்ஈடுபடவேண்டும்"

இவ்வாறு எழுத்தாளரும், இளைப்பாறிய அதிபருமான திரு. த. சண்முகசுந்தரம் மாவிட்டபுரம் மரக் கூட்டுத்தாபனப் பொறுப்பாளராக இருந்து ஓய்வுபெறும் திரு இளையதம்பிக்கு அளிக்கப்பட்ட சேவைநலம் பாராட்டு விழாவில் பேசுகையில் கூறினார்.

36 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும் திரு. இளையதம்பிக்குப் பொதுமக்களாலும் ஊழியர்களாலும் அளிக்கப் பட்ட மேற்படி சேவைநலம் பாராட்டு விழா பிரமஸ்ரீ சு த சுந்தரமூர்த்தி ஐயர் தலைமையில் நடந்தது. திரு த. சண்முகசுந்தரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"சென்னையில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற சமயம் வெளிநாட்டவர்களைக் கவரும் வகையில் பலவிதமான அம்சங்கள் இடம்பெற்றன. அதேபோல இலங்கையில் நடைபெற்றபோது, வெளிநாட்டவர்களைக் கவரும்வகையில் மாட்டுவண்டிச்சவாரியை நடாத்த முன்னின்று உழைத்தவர் திரு இளையதம்பி. மாட்டுவண்டிச் சவாரியை நடாத்தக் கூடிய ஸ்ரேடியம் ஒன்று அமையவேண்டும் என்று ஆசை கொண்டுள்ள இவர் தேசியக் கலையான மாட்டுவண்டிச் சவாரியை மட்டுமல்லாது காவடி, கரகம் போன்றவற்றையும் வளர்க்க முன்னின்று உழைத்துவருகிறார். இவர் போன்றவர்கள் அரச உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றாலும் தேசியக்கலைகளை வளர்ப்பதில் தொடர்ந்து ஈடுபடவேண்டும்."

புதிய பொறுப்பாளராக நியமனம்பெற்ற திரு நவரத்தினராசாவுக்கும் வரவேற்பு அளிக்கப்பட்டு மற்றும் எஸ். ஆர். ஞானசுந்தரம், க கதிரமலையான், எஸ் கந்தசாமி, எஸ் சதாசிவம் உட்படப்பலர் உரையாற்றினர்.

## சன சமூக நிலைய ஒன்றியம் அங்குரார்ப்பணம்

(கொழும்புத்துறை)
"சமூக அபிவிருத்திப் பணிகளில் சன சமூக நிலையங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் கிராமிய அபிவிருத்தியை மேம்பாடடையச் செய்ய முடியும் உள்ளூராட்சித் திணைக்களம் இதற்கான ஊக்குவிப்பு உதவிகளை அளித்து வருகின்றது"

உள்ளூராட்சித் திணைக்களப் பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி செ. கணேசன் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை பலோலி உப அலுவலகப் பகுதிச் சன சமூக நிலையங்களின் ஒன்றியத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசும் பொழுது இவ்வாறு கூறினார்.

தலைமைக்காரியாலய சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த. பாஸ்கரன், கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு வெ. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர். பின் வருவோர் ஒன்றிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

தலைவர் திரு. பா. இரகுநாதன், உபதலைவர் திரு ஆ. வடிவேலு, செயலாளர் திரு க. கணேஸ், உப செயலாளர் திரு கே. சந்திரகாந்தன், பொருளாளர் திரு வீ. எஸ் செல்வராசா நால்வர் கொண்ட நிர்வாக குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]
வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் தர்மபரிபாலன சபையின் ஐம்பதாவது வருடாந்தப்பொதுக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

நாளை பிற்பகல் மேற்படி ஆலயமண்டபத்தில் இக் கூட்டம் நடைபெறும்.

0 0 0

(புலோலி)
புலோலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிறு சங்கத் தலைவி செல்வி கிருஷ்ணவேணி வீணுகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

# பண்டிதமணிஐயா நினைவு

பண்டிதர் ஐயா அவர்கள் ஒரு நெடுங்காப்பியம். அவருடைய வாழ்நாள் முழுவதும் ''தருமமென்றெரு பொருளுளது'' என்பதை நடுவணுய் வைத்து நீதியை நீட்டி நீதி செய்து நீதியையே பெருநிதியாக வைத்து வாழ்ந்தார்.

உண்மையை மறைத்து உயர்வுக்காக எவர் எதைச் செய்தாலும் அதை அப்பொழுதே கண்டிக்கும் நெஞ்சுரமும் கொண்டவர். நன்றி மறவா நல்லிதயம் படைத்த ஐயா அவர்களின் இளமைக் கல்வி மட்டுவிலுள்ள கிறித்தவ பாடசாலையில் ஐந்தாம் வகுப்புடன் நின்றுவிட்டது. சிறு வயதிலேயே தாயார் வள்ளியம்மையை இழக்க நேர்ந்ததால் அவரது தந்தையார் ர்மட்டுவில் சின்னத்தம்பி அவர்களின் அரவணைப்பிலேயே வாழ்ந்து வந்தார்.

ஒரு குலத்துக்கு ஒரு மைத்தனுய்ப் பிறந்த கணபதிப்பிள்ளை கல்வி கேள்விகளிற் சிறந்தவராய்த் திகழ வேண்டும் என்பது அவரது தந்தையாரின் பேரவா. அதனுல் ஊரிலுள்ள படித்தவர்களிடம் தமது மகனைச் சேர்ப்பித்து புராண இதிகாசங்களில் ஈடுபடச்செய்தார். ஆயினும் இளைஞனை கணபதிப்பிள்ளைக்கு வண்டிச் சவாரியிலும் சீட்டாட்டத்திலும் நெல்வயல் பண்ணையைக்கவனிப்பதிலுமே நாட்டம் இருந்தது. இந்நாட்டம் பத்தொன்பது வயதுவரைஇருந்ததாகப் பண்டிதமணி குறிப்பிட்டுள்ளார்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்துக்கல்விமான்கள் ஒன்றுகக் கூடி இலக்கிய விமரிசனம் செய்வதற்காகக் கலாநிலையம் என்றெரு தாபனத்தை யாழ் நகரில் நடத்திவந்தனர். அந்த நிலையத்தில் சேர். பொன். இராமநாதன் அவர்களின் மருகரான காலஞ்சென்ற திரு சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் பண்டிதர்ஐயா அவர்கள் சின்னத்தம்பிப் புலவர்பற்றி மூன்று மணித்தியாலம் செய்த பிரசங்கம் தன் செவிகளில் என்றும் ஒலித்துக்கொண்டிருக்கும் என்று திரு. ஹன்டி பேரின்பநாயகம் பலமேடைகளிற் கூறியுள்ளார்.

மாபெருந் தமிழ் மலையாய்த் திகழ்ந்த பண்டிகமணி தமது ஆசானுய் விளங்கிய சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரையும் யாழ் நாவலர் பாடசாலை முகாமையாளராய் இருந்த கைலாயபிள்ளை அவர்களையும் நெஞ்சார நேசித்தார். அதனுல் அவ்விருவரும் இயற்கை எய்தியதையிட்டு 'இரண்டு மனிதர்கள்' என்றெரு கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் அவர்கள் இருவரின் குணுதிசயங்களையும் குறிப்பிட்டுவிட்டு ஈற்றில் அவ்விருவரும்மறைந்ததால் 'இனிச் சைவமும் தமிழும் .........'' எனத்தொடங்கிய வாக்கியத்தை முடிக்காமலே விட்டுவிட்டார்,

புலவர் அவர்கள் மறைந்த பின்னர் தமக்குத் தொல்காப்பியம் கற்றுக் கொடுத்த வித்துவான் ந. சுப்பைய பிள்ளை அவர்களையும் பண்டிதமணி மிகவும் நேசித்துவந்தார். திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் பேராசிரியராய் இருந்தகாலத்தில் அக்கல்லூரியின் மூன்று கண்களாய்த் திகழ்ந்தவர்கள். அதிபர் உப அதிபர் பண்டிதமணி ஆகியோர். உபஅதிபரும் மௌன தவமுனிவருமான திரு.பொ. கைலாசபதி அவர்களின் கூட்டுறவால் சமயம், தத்துவம், தருக்கம் ஆங்கில இலக்கியம் ஆகிய அனைத்திலும் புலமையும் பண்டிதமணி பெற்றுக் கொள்ளக்கூடியதாய்இருந்தது

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் 1950 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடத்திய நன்காவது தமிழ் விழாவில் ''தமிழ்'' என்ற தலைப்பில் பண்டிதமணி ஆற்றிய சொற்பொழிவு தமிழகத்துக் கல்விமான்களுக்கெல்லாம்; புத்தி கட்டுவதாய் அமைந்திருந்புதது. ''தமிழ் எந்நுதலிற்றேவெனில், அது களவு நுதலிற்று'' என்ற பீடிகையுடன் தொடங்கிய பண்டிதமணி, 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி'' என விரித்து, ''முடிவிலாதுறை சுன்னுகத்தான் வழி முந்தித் தாவடி கொக்குவில்'' என நீட்டிச் சென்றபோது சபையோர் அனைவரும் கைகொட்டி மகிழ்ச்சி தெரிவித்தமை இன்றும் நெஞ்சில் பசுமையாகவுள்ளது.

அக்காலத்தில் யாழ் சைவ பரிபாலன சபையார் ஆண்டுதோறும் விழாவெடுத்துச் சைவ மகாநாடு கூட்டுவது வழக்கம் அந்த வரிசையிலே ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சைவப் பேரறிஞர் வச்சிரவேல் முதலியார் தலைமையிலே ''கீதையும் துறவும்'' என்ற மகுடத்தில்

சோ. பரமசாமி

பண்டிதமணி ஆற்றிய சொற்பொழிவு விமரிசனத்தில் அடங்காத சிறப்பைப் பெற்றது.

தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களது நல்லுரைக் கோவை என்ற நூலிலே அவர் காலத்தில் வாழ்ந்த புலவர்கள எழுதிய சீட்டுக் கவிகள் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது அத்தகைய கவிஞர்களைப் போல் இக்காலத்தில் எழுதுவார் இல்லையோ என்று மனம் அங்கலாய்ப்பதுண்டு. அவ்வாருன அங்கலாய்ப்பை பண்டிதமணி தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர்கள் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் மனைவியார் தமக்குச் செய்த பணி விடைகளை நன்றியுணர்வுடன் ''தாரமாய்த் தாயானுள்கை'' என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதிப் பண்டிதமணியின் பார்வைக்கு அனுப்பினர். அக் கவிதையைப் படித்த ஐயா அவர்கள் இன்னுமொரு படி மேலே சென்று ''தாயானுள் கையிருக்கக் கண்ணுக்கு வேண்டும். கவி'' என்று இரவு வேளைகளில் கண் விழித்திருந்த புலவரின் மனைவியுடைய பண்பைப்போற்றி இருப்பதைப் படிக்கும்போது தமிழ் நெஞ்சம் இறும்பூதெய்தும்.

சேனுவரையம், நச்சினர்க்கினியம், சிவஞானபோதம் முதலிய நூல்களில் நிறைந்த பயிற்சியுடைய பண்டிதமணி அவர்கள், தாம் சொல்லுவது பிறருக்கு விளங்கவேண்டும் என்னும் கருத்துடன், உரையாடும் போதும் மேடைப் பேச்சிலும், எழுத்திலும் அவற்றைக் கையாள நினைப்பதில்லை. ஐயாவின் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் மிகச் சிறுமையும் எளிமையும் உடையன.

தமிழ் கூறும் நல்லுலகின் இரு சுடராயும் சைவத்தின் காவலராயும் எம்மத்தியில் அகல் விளக்காயும் ஒளிவீசிய பண்டிதமணி அவர்கள் இயற்கை எய்தியமை கேட்டு, பல்கலைக் கழகம் முதல் கிராமத்துப் பாடசாலைகள் ஈருகவுள்ள எல்லா இடங்களையும் சார்ந்தோர் அனைவரும் கண்ணீர் வடித்து ஐயாவின் இறுதி அஞ்சலியில் வந்து கலந்து கொண்டகாட்சி நெஞ்சை நெகிழ்க்கும்.

வங்கத்துக் கவிஞரை ''வங்கத் தாத்தா'' என்றும் ஈழத்துப் புலவரைத் தங்கத் தாத்தா என்றும் வருணித்த பண்டிதமணி ஐயா அவர்கள், தமிழர் இதயங்களில் ஒரு தமிழ்த் தாத்தாவாக என்றும் வாழ்வாரென எண்ணி ஆறுதல் அடைவோமாக!

# பண்டிதமணிகணபதிப்பிள்ளை நினைவுச் சொற்பொழிவுகள்

பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நீண்ட காலமாக நினைவுச் சொற்பொழிவுகள் என்னும் தொடரில் இலக்கிய கர்த்தாக்கள், வரலாற்றுவாணர்கள், விஞ்ஞானமேதைகள், அரசியல் நிபுணர்கள் இத்தியாதி பேர்களை வரவழைத்துப் பெரியவர்கள் பெயர் நிலைக்க் ஆண்டுதோறும் நினைவுப் பேருரைகள் நிகழ்த்துவித்தல் சம்பிரதாயமாய்ப் பாரம்பரியமாய் வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாய் சேர் பொன் இராமநாதன் நினைவுப் பேருரைகள் நிகழ்த்திவந்தார். முன்னர் முதலில் 1934-ம் ஆண்டில் தமிழ்நாட்டுப் பெரியார் சத்தியமூர்த்தியும், 1936ம் ஆண்டில் சேர் சி பி. இராமசாமி ஐயரும், பின்னர் ஆனே,கிரி, பிரகாசா மகாதேவன், ராஜமன்னர் முதலானேரும், ஐவர் ஜெனிங்கஸ் முதலானேரும் இன்னும் சிலரும் அவ்வப் போது பேசினர்கள்.

இராமசாமி ஐயர் அவர்கள் ஐம்பதாண்டுகளுக்குமுன் பேசியவை இன்றும் காதில் ஒலிக்கிறது. ''History records that when Alexander the Great came to India, he saw civilization flourishing.''

தமிழ்நாட்டில் பேரறிஞர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் தம் தாயார் சொர்ணம்மாள் நினைவுப் பேருரைகள் நிகழ்த்துவதற்கு வேண்டிய வைப்புநிதி வழங்கியுள்ளார்கள். அந்தவகையில் திருவள்ளுவர் திருக்குறள் பற்றிய ஆய்வுரைகள் ஆங்கிலத்தில் உலகமறிய வந்துள்ளன. எங்கள் நடேசபிள்ளை அவர்களே முதற்பேச்சினை அருமையாகப் பேசியுள்ளார்.

இன்னும் லேடி லீலாவதி இராமநாதன் நினைவுச் சொற்பொழிவுகளும் கலாநிதி கைலாசதி நினைவுச் சொற்பொழிவிகளும் யாழ்ப்பாணத்தில் பெருவிருந்தாக அமைந்துள்ளன.

இந்தவகையில் தமிழிலக்கிய நயம் கண்ட எங்கள் பண்டிதமணி அவர்கள் பெயர்நிலைக்க நினைவுப் பேருரைகள்நிகழ்த்துவதற்கு அவரின் மாணுக்கர்களும், அன்பர்களும், அபிமானிகளும் முன்வருவார்களானுல் நன்றுகும்.

— மில்க்வைற் செய்தி.

# ''வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி...''

துன்பத்திற்கும், துன்பியல் நாடகத்திற்கும் (Tragedy) வரைவிலக்கணம் கூறுவது இலகுவானதல்ல.

ஆங்கிலப் புலவர் மில்தன் தமது 'சுவர்க்க இழப்பு' என்ற செய்யுட் காவியத்தில் பரம்பொருளைக் கதாநாயகனுகக் கொண்டபோதும் அவருடன் போர்புரிந்த சாத்தனைக் கதாநாயகனுகக் கருதுமளவிற்கு அவனுடைய வீரத்தை வர்ணித்துள்ளார். அவனே கதாநாயகன் என்ற சர்ச்சை சும்மா எழவில்லை.

ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகங்களே உலகின் சிறந்த இலக்கியமெனக் கொள்ளப்படுகின்றன. துன்பத்தின் தனித்துவச் சிறப்பு மனித உணர்வின் உச்சியைத் தொடவல்லது.

விடயம் பெரிது; முடிவில்லாத ஆராய்ச்சிக்குள்ளாகிறது. நுண்ணறிவின்றி மகாகவிகளின் படைப்பை நுனிப்புல் மேய்வதுபோல் விமர்சிப்பது துன்பத்தில் காணவல்ல இன்பத்தைக் கெடுத்துவிடுகிறது.

இவ்வித இன்பத்துக்குப் பேர்போன பாட்டு கம்பராமாயணத்தில் வருவது பலருக்குத் தெரியும்.

''வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடனின்றி உயிரிருக்கும்
இடம்நாடி இழைத்தவாறே
கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து
தடவியதோ ஒருவன்வாளி.''

இன்பம் எங்கே? ராமபாணத்தின் வலிமையல்ல; தெய்வக் கற்புவாந்ய்த சீதையின் அழகல்ல; மன்னன் ராவணனின் பேராண்மை காதலுக்கிரையான சோகத்தை மரங்களும் மலைகளும் உருக மனைவி மண்டோதரி என்னும் கற்பிற்கரசி வாய்திறந்து பாடியதே சோகத்தின் சிகரம்!

''பிறருக்குரிய பெண்மேல் உள்ளம் செல்லாது பாதுகாப்பதே பேராண்மை என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறுர்'' என்ற வியாக்கியானம் எழுவதானுல் பாட்டின் சோகம் பறந்துவிடும். தெய்வப் புலவர்கள் இருவருக்கும் அது அபகீர்த்தியென அறிக.

## பாஸ்கா காலத்தின் 4-ம் ஞாயிறு

# நல்ல ஆயன் நானே....

பாஸ்கா காலமானது. இறை கிறிஸ்துவின் மகிமையையும் அவர்தம் மாட்சிமை மிக்க உயிர்ப்பையும் நாம் விசுவாசத்துடன் ஏற்று வாழவும் அவரின் விண்ணக இராச்சியத்தின் மகிமையை பறைசாற்றவும் எமக்கு அளிக்கப் பட்டுள்ளது!

புலன்களுக்கு எட்டாத இறைவன் நாங்கள் இப் பரஸ்கா பலியினுல் அன்றும், மனமகிழ்வோடு வாழவும் எங்கள் பாவங்களுக்கு பரிகார புனித செயல்களில் ஈடுபட்டு உலகெங்கும் இறைவனின் நற்செய்தியை அறிவித்து முடிவற்ற மகிழ்ச்சியின் காரணராக வேண்டும் என்று எம்மை அழைக்கின்றுர்.

நல்லாயன் உயிர்த்தெழுந்தார்; அவர் தம் ஆடுகளுக்காக உயிரைக் கொடுத்தார்; தம் மந்தைகளுக்காக இறக்க திருவுளமானுர் என்ற இச்செய்தி இறை கிறிஸ்து பெருமான் எம்மேல் கொண்ட அளவற்ற அன்பையும் பாசத்தையும் எடுத்துரைக்கின்றது காலத்தால் அழியாத அவர் அன்பு கால சுழற்சியில் சிக்கி தவிக்கும் மானிடரான எமக்கு ஓர் ஆறுதல் அளிக்கும் அருட் சாதனமாக விளங்குகின்றது.

எம்மை மீட்க வந்த மாபரன் யேசு உலக இன்பங்களை துறந்து தம்மை முழுமையாக ஏற்று கொள்ள அழைக்கின்றுர். ஏனெனில் உலக இறுதி வரைக்கும் என் மீட்பு கிடைக்க புறவினத்தாரின் ஒளியாகவே நான் வந்தேன் என்று கூறுவதன் மூலம் கிறிஸ்து எம்மேல் கொண்ட அளவற்ற அன்பின் தன்மை வெளிப்படுவதை தெட்டத் தெளிவாகக் காணுகின்றேம்

''நல்ல ஆயன் நானே, என் ஆடுகள் என்குரலுக்கு செவிமடுக்கின்றன. நானும் அவற்றை அறிவேன். அவையும் என்னைப் பின்தொடருகின்றன'' என்ற கிறிஸ்துவின் செய்தி எம் உள்ளங்களுக்கு புத்துணர்வையும் புது மகிழ்ச்சியையும் அளிக்கின்றது என்மேல் விசுவாசம், கொண்டோரைஎன்றும் கைவிடமாட்டேன்.'என்ற செய்தியை புறவினர் தராகிய எமக்கு கிறிஸ்து விளக்குகின்றுர்.

எனவே அன்பு சகோதரர்களே! ஆண்டவரின் அருள் இவ்வுலகில் நிறைந்துள்ளதை அவரின் வார்த்தைகள் மூவுலகம் எங்கும் பரந்துள்ளன. யேசுவே எமது நல்ல ஆயன்; அவர்தம் திருச்சபை வழியாக தம்மைஎமக்கு என்றும்வெளிப் படுத்தி கொண்டிருக்கிறுர் என்ற உண்மையான விசுவாசத்துடன் இறை கிறுஸ்துவின் வழியில் நடந்து விசேடமாக இந்த பாஸ்கா காலத்தில் எம் நல்ல ஆயனுக்கு சான்று பகிர்வோமாக.

—பி. ரவி குரூஸ்

# ஒன்றும் தெரியாதார்

—o—

நித்தம் நித்தம் புதுக்கதைகள்
நீண்டு நீண்டு சென்றுலும்
நித்தியமாக மனித பலி
நிச்சயமாகத் தொடர்ந்தாலும்
பெருகி ஓடும் குருதிவெள்ளம்
பேராருக ஓடிடினும்
சித்திரப் பூங்கொடியாள் பொட்டும்
பூவும் இழந்து துவண்டாலும்
சன்னதி முருகன் பவனிவரும்
சித்திரத் திருத்தேர் எரிந்தாலும்
எம்மவரில் ஒரு சிலருக்கு
ஏனே ஒன்றும் தெரியுதில்லை!

—இரா. மகேந்திரசிங்கம்.

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

★ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

## 5

வீட்டினுள் வந்து கொண்டிருந்த பொன்னம்பலத்தையும் புவனசுந்தரியையும் வியப்புடன் பார்த்தார் பொன்னுத்துரைமாஸ்டர். வசந்தமலர் எழுந்து திண்ணையில் சாய்ந்தாள்.

பொன்னம்பலமும் புவனசுந்தரியும் திண்ணையில் வந்து அமர்ந்தார்கள். பொன்னம்பலத்தின் முகத்தில் கலவரம் தென்பட்டது. புவனசுந்தரியோ உறுதியுடன் காணப்பட்டாள். ''மாஸ்டர் இவர் செத்தவீட்டுக்காக எவ்வளவு காசு தந்தவர்'' என புவனசுந்தரி கேட்டாள்.

பொன்னுத்துரை மாஸ்டருக்கு ஓரளவுக்கு அவர்கள் வந்ததன் விஷயம் விளங்கியது, ''மூவாயிரத்து எண்நூற்றி ஐம்பது ரூபா தந்தவர்'' என்றார் மாஸ்டர். ''அதை என்ன மாதிரி செய்யப் போறியள்'' என்று புவனசுந்தரி கேட்டாள்.

மாஸ்டருக்கு திகைப்பாக இருந்தது, என்ன செய்வது என்று தெரியவில்லை. அவர் பொன்னம்பலத்தையும் வசந்தமலரையும் மாறிமாறிப் பார்த்தார்.

வசந்தமலருக்கு மாஸ்டர் படுகின்ற சங்கடம் புரிந்தது, செத்த வீட்டிற்கு மாஸ்டர் செலவு செய்தவர் என்பதும் அவருக்கு பொன்னம்பலம் தான காசு கொடுத்தவர் என்பதும் வசந்தமலருக்கு தெரியும. அதைத் திருட்பிக் கொடுக்க தன்னிடம் ஒரு வழி இருககிறதுஎன்பதையும் அவள் தெரிந்து கொண்டதால் பேசாமல் இருந்தாள். ''இன்னும் கொஞச நாட்களுக்குள் ஒரு மாதிரி திருப்பி தந்து விடுகிறேன்.'' என்றார் மாஸ்டர். ''கொஞ்ச நாட்கள் என்றால் எப்ப மாஸ்டர் தரப்போகின்றீர்கள்'' புவனசுந்தரி திரும்பவும் கேட்டாள். ''இரண்டு கிழமைக்குள்'' ''அது ஆக எட்டிப்போட்டுது மாஸ்டர். எங்களுக்கு அவசரமாக வேணும்'' என்றாள் புவனசுந்தரி. ''அவசரமென்றால் எப்பவேணும்'' என மாஸ்டர் கேட்டார. ''நாளைக்கு அல்லது நாளையின்றைக்கு வேணும்.''

மாஸ்டரின் நிலை தர்மசங்கடமானது என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளித்தார். அவரது நிலைமையை அவதானித்த வசந்தமலர் வேதனைப்பட்டாள்.

அவளிடம் ஒரு உறுதி பிறந்தது. ''புவனசுந்தரியக்கா அவசரப்படாதேங்கோ இன்றைக்கு நான் உங்கடை காசை தாறன்'' என்று சொல்லிவிட்டு மெதுவாக எழுந்து வீட்டினுள் போனாள்.

வசந்தமலர் அப்படி சொன்னது திண்ணைகளில் இருந்த எல்லோருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது, இவளுக்கு எங்காலே இவ்வளவு பணம்' என்று பொன்னுத்துரை மாஸ்டரும் தான் நினைத்ததற்கு மாறாக நடக்கப் போகிறதே என்று புவனசுந்தரியும் நினைத்துக்கொண்டார்கள், பொன்னம்பலம் எதுவுமே பேசாமல் திண்ணையில் ஆழ்ந்த யோசனையுடன் அமர்ந்திருந்தார்.

வீட்டுக்குள் இருந்து வசந்தமலர் வெளியே வந்தாள். அவள் கையில் வசந்தமலருக்கு கந்தமூர்த்தி கட்டியதாலிக் கொடிமின்னியது. கந்தமூர்த்தி கட்டிய அந்தத்தாலிக் கொடி இன்னமும் அதன் பளபளப்பு மங்காது காணப்பட்டது. வசந்தமலரின் உடலில் ஒரு உறுதி பிறந்திருந்தது முகத்தில் வைராக்கியம் தெரிந்தது.

மாஸ்டர் அதிர்ந்து போனார், எதையோ சொல்ல வாயெடுத்தார் ஆனல் உதடுகள் அசைய மறுத்தன. ''புவனசுந்தரியக்கா இதை வித்துப்போட்டு உங்கடை காசை எடுத்துக் கொண்டு மிச்சம் இருந்தால் ஆறுதலாக தாங்கோ'' என்று கூறியவாறு புவனசுந்தரியிடம் தாலிக் கொடியைநீட்டினாள்.

புவனசுந்தரியின் முகத்தில் ஒரு புதிய ஒளி பிறந்தது. அவள் போட்ட திட்டம் பலித்துவிட்டது. பொன்னம்பலம் செத்தவீட்டு செலவுக்கு காசு கொடுத்ததைக் கேள்விப்பட்டதும் அதிர்ந்து போன புவனசுந்தரி அதை எப்படி அந்த காசை திரும்பப் பெறுவது என யோசித்த போது, வசந்த மலரின் கழுத்தில் மின்னிய அந்த தாலிக்கொடியின் ஞாபகம் வந்தது. அதை யாராவது வாங்க முன்னர் அல்லது வசந்தமலர் அவசர தேவைக்காக விற்பதற்கு முன்னர் அந்தத் தாலிக் கொடியை தான் எப்படியும் எடுத்துவிட வேண்டும் என அவள் நினைத்தாள்.

அந்த திட்டத்துடன் தான் பொன்னம்பலத்துக்கு அதைப் பற்றி சொல்லி கட்டாயப் படுத்தி அழைத்துக் கொண்டு வந்திருந்தாள். ஆனல் தாலிக் கொடி பற்றி கதைப்பதற்கு முன்னரே வசந்தமலர் தானகவே தாலிக்கொடியைக் கொண்டு வந்து தந்ததை நினைக்கும் போது புவன சுந்தரிக்கு திருப்தி அதிகமாக இருந்தது. ''வசந்தமலர், நீ காசுக்காக தாலிக் கொடியை தாறது சரியில்லை. இரண்டினதும் பெறுமதி சரியாகஇருந்தாலும் பாக்கிறவைக்கு ஒரு மாதிரி இருக்கும். ஆனபடியால் எங்கடை காசைக்காசாக தந்தால் நல்லாய் இருக்கும்'' என்றாள் புவனசுந்தரி. ''அதில பரவாயில்லை அக்கா தாலிக் கொடியை விற்றுத்தான் நான் உங்கடை காசைத் தாறதென்டால் தரவேணும். அது எனக்கு வீண் சிரமம் தானே. நீங்கள் அதைக் கொண்டு போங்கோ'' என்றாள் வசந்தமலர். ''சரி அப்ப நாங்கள் போட்டு வாறம்.'' என்று கூறியவாறு புவனசுந்தரி திண்ணையை விட்டு எழுந்தாள், பொன்னம்பலமும் அவள் பின்னால் நடக்க ஆரம்பித்தார்.

இதுவரைநேரமும் மௌனமாக இருந்த பொன்னுத்துரை மாஸ்டர், இப்போது வசந்தமலர் பக்கம் திரும்பினார்- ''என்ன பிள்ளை நீ செய்த வேலை. தாலிக் கொடியை தூக்கிக் கொடுத்திட்டாய். நாலைந்து நாட்களுக்கு பிறகு நான் ஒருவழி செய்திருக்க மாட்டேனே?'' என்று அனுதாபப்பட்டார் அவர். ''இல்லை மாஸ்டர் அவை தாலிக் கொடியை வேண்டுறதற்காகத்தான் உவ்வளவு அவசரப்பட்டுவந்தவை. அவர் என்னைக் கடன்காரியாக விட்டுவிட்டுப் போகவில்லை. தன்னுடைய செத்த வீட்டு செலவுக்காவது அந்த தாலிக் கொடியை விட்டிட்டுப் போனரே அந்தளவும் போதும்'' என்று வசந்தமலர் கூறும் போது அவள் விழிகள கலங்கி கண்ணீரால் நிறைந்தன.

சிறிது நேரத்திற்கு பின்னர் பொன்னுத்துரை மாஸ்டர் விடை பெற்றுச் சென்றார்.

வசந்தமலர் பழைய படி யோசனையில் ஆழ்ந்தாள்.

★

தங்கலட்சுமி அந்தப் பகுதியில் நல்ல பிரபல்லியமானவள். நடுத்தரவயதை தாண்டிவிட்டாலும் நாகரிகமாய் இருப்பதும், தங்கலட்சுமி வீட்டில் உள்ள மூன்று பெண்களும் கவர்ச்சியாக காணப்படுவதும், வீட்டுப்படலையருகிலோ அல்லது வீட்டு விறாந்தையிலோ நின்று எல்லோரோடும் அதிகமாக கதைப்பதும்தான் தங்கலட்சுமி வீடு பிரபல்லியமாக இருப்பதற்கு காரணம்.

தங்கலட்சுமியின் புருஷன் சின்னத்தம்பி இறந்து போய் பதினைந்து வருடங்களாகி விட்டது, அவர் அரசாங்கத்தில் வேலை பார்த்தவர் அதனல் விதவைப் 'பென்சன்' வந்து கொண்டிருக்கிறது. அந்த 'பென்சன்' பணத்துடன் ஆட்களை வைத்து தோட்டம் செய்வதாலும் அவர்கள் வாழ்க்கை வசதியாக இருக்கிறது.

தங்கலட்சுமியின் மூன்று பெண்களில் மூத்தவள் சாரதா. இருபத்தியாறு வயதிருக்கும், காதலித்து கலியாணம் செய்து புருஷனேடு போனவள், போன வேகத்தோடு தாய்வீட்டுக்கு திரும்பி வந்து விட்டாள். அவள் புருஷன் கணநாதனுக்கும் அவளுக்கும்தகராறு.

அடுத்த பெண் சுஜாத்தா இருபத்திரண்டு வயதாகிறது. கடைசிட் பெண் பிரியா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள்.

மூன்று பெண்களுக்கும் நாகரிகவிடயங்களிலும் ஏனைய விசியங்களிலும் பூரண சுதந்திரம் இருந்தன. அதனல் தான் மூத்தவள் தன் எண்ணப்படி காதலித்தாள் கலியாணம் செய்தாள், பிறகு புருஷன் ஒத்துப்போகவில்லை என்பதற்காக திரும்பி வந்துவிட்டாள்.

தமக்கையைப் போலவே சுஜாத்தாவும் திருவரதனை இப்போது காதலிக்கின்றாள்.

பிரியாவுக்கு 'டியூசன்' சொல்லிக் கொடுக்க செந்தூரன் வருவான். அவர் 'ரியூசன்' சொல்லிக் கொடுப்பது கிழமையில் நான்கு நாட்கள் என்ற தோரணையில் தொடங்கினலும், பிறகு நாளாக கிழமை நாட்கள் முழுவதும் அவன் 'ரியூசன்' கொடுக்க வருவான். சிலவேளைகளில் பிரியா நிற்காவிட்டால், கணவனை பிரிந்திருக்கும் சாரதாவுடன் அவன் கதைத்துக் கொண்டிருப்பான். வெகு நேரமாக செந்தூரனும் சாரதாவும் உரையாடுவார்கள். அவள் முழங்காலுக்கு மேல் தொங்குகின்ற சோட்டியணிந்து கொண்டு காலுக்குமேல் கால் போட்டவாறு விழிகளை அடிக்கடி வெட்டித்திறந்து கொண்டு பேசுவது வெகு ரம்மியமாக இருக்கும்.

பிரியாகூட 'ரியூசன்' நேரத்தில் அடிக்கடி விழுந்து விழுந்து சிரிப்பாள். அவள் சிரிக்க வேண்டும் என்பதற்காகவே செந்தூரன் அடிக்கடி பகிடி விடுவான்.

தங்கலட்சுமிக்கு எதிலுமே அக்கறையில்லை. அவள் காலையும் மாலையும் ஒழுங்காக கோயிலுக்குப் போவாள் 'எல்லாம் முருகன் விட்டவழி; என்று அடிக்கடி சொல்லுவாள். மிகுதி நேரங்களில் பிள்ளைகளுடன் சேர்ந்து 'வீடியோ' படம் பார்ப்பாள்.

என் பெண்கள் அதிர்ஷ்டசாலிகள். அழகு தேவதைகள் என்ற எண்ணம் அவளுக்கு. அவள் கருத்துப்படி அவர்களை கலியாணம் செய்ய பலபேர் காத்திருக்கின்றார்கள்'' நான் ஒன்றுக்கும் குறுக்கே நிற்க மாட்டேன். பிள்ளையளுக்கு எது விருப்பமோ அதன்படி நடக்கட்டும் என்பாள்.

காலையிலும் மாலையிலும் அவள் கோயிலுக்குப் போகும் போது அங்கு பலர் கூட்டமாக சேருவார்கள். ஊர் புதினங்களை அலசுவார்கள், பொதுவாக மற்றைய பெண்களின் ஆடை. அணிகளை நடையுடை பாவனைகளை அலசுவதில் தங்கலட்சுமிக்கு தனிப் பிரியம்.

அவள் பெற்ற பெண்களும் தாயைப்போல ஊர்புதினங்களை அலசுவதில் தனித்தன்மை பெற்றவர்கள்.

முன்பு முழுட்பாவாடை சட்டையுடன் அடக்க ஒடுக்கமான உடையில் மாத்திரம் இருந்த காலம் தொடக்கம், இன்று நவநாகரிகம் என்ற போர்வையில் ஆடை குறைப்பு செய்து விட்ட காலம் வரை

(8-ம் பக்கம் பார்க்க)

★ செனகல் நாட்டுக் கவிஞன்
டேவிட் டியொபபின்


## அனைத்தையும் இழந்த அவன்

சூரியன் எங்கள் குடிசையில் ஒளிர்ந்தான்
இரவின் மந்த மாருதத்தில்
பாம் மரங்களென
எமது மனைவியர் அழகும் மென்மையும் மிகுந்துவிளங்கினர்
மரணத்தைப் போன்ற ஆழமான ஆறுகளை,
எமது குழந்தைகள் கடந்தனர்
எமது சிறுபடகுகள் முதலைகளுடன் போட்டியிட்டன.
அன்னை நிலவு நம் நடனங்களைத் தரிசித்தது
சுதந்திரத்தீயின் மத்தியிலே
சுந்தர மகிழ்ச்சியின் தாளங்கள், துணிவின்
தவிற்தாளங்கள் ...

பின்னர், ஒருநாள், பேரமைதி ...
சூரியக்கதிர்கள் செத்துப்போயின
எமது குடிசை அர்த்தமிழந்து வெறுமையானது
உருக்குக்கண் ஆக்கிரமிப்பாளர் கடின உதடுகளால்
எமது மனைவியர் செவ்வாய்கள் பிழியப்பட்டன.

இரும்பு ரத்தச் சீருடைக்காய்
எமது குழந்தைகள் தம் அமைதியான அம்மணத்தை
இழந்தனர்
அடிமை இரும்புகள் எம் இதயம் பிளந்தன
எமது இரவின் தாளங்கள் ... எமது தந்தையர்
தாளங்கள்...

தமிழில்: என். சண்முகலிங்கன்.



வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கென தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள வெங்கலத்திலும் கருங்கல்லிலும் உருவாக்கப்பட்ட விக்கிரகங்களைப் படத்தில் காணலாம். (படம். புலோலி நிருபர்)

# தேச வழமையில் ஒரு கண்ணோட்டம்

இலங்கையில் தமிழர்களுக்கென ஒரு தேசம் அவர்களுக்கென ஒரு தனியான வழக்கம், பண்பாடு இருந்தது என்பதையும் அதை அந்நிய ஆட்சியாளர்களாகிய போத்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், பின்னர் இலங்கையரும் கூடப்பேணிப்பாதுகாத்தார்கள் என்பதையும் இன்றுவரை எடுத்துக்காட்டிக்கொண்டிருப்பதுதான் தேசவழமைச் சட்டம். கலாநிதி எச்.டபிள்யூ தம்பையா அவர்கள் கூறுவதுபோல் மொழியாராய்ச்சியின் அடிப்படையில் நோக்கின் தேசவழமையின் அர்த்தம் எளிதில் புலப்படுகின்றது. அதாவது ஒரு தேசத்தில் பேணப்பட்ட வழமையே தேசவழமை என்று கூறுகின்றார். அப்பிரதேசமே முல்லைத்தீவு, வன்னி, மன்னார் பிரதேசங்களை உள்ளடக்கிய வடமாகாணமும் அப்பிரதேசங்களை வாழிடமாகக் கொண்ட தமிழர்களுமாவார்.

எவ்வாறு நாகரிகத்தின் உச்சக்கட்டத்தில் வாழ்ந்த ரோமானிய இனம் தங்களுக்கென சில நடைமுறைகளையும், பழக்க வழக்கங்களையும் கையாண்டு ஒழுங்கான சமூக வளர்ச்சிப் பாதையில் முன்னேற்றம் கண்டதும் பின்னர் அவையே ''பன்னிருபட்டயமாகத்'' தொகுக்கப்பட்டுச் சட்டவல்லுநர்களாலும், நீதிபதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் ரோமானியச் சட்டமாக வளர்ச்சியடைந்ததோ அவ்வாறேவடமாகாணத்தை வாழிடமாகக் கொண்ட தமிழ் மக்களின் வழக்கங்களும் நடைமுறைகளும் டச்சுத் தேசாதிபதி சிமென்ஸ் அவர்களின் கட்டளைப்படி 1707 ம் ஆண்டு தொகுத்துப் பூரணப்படுத்தப்பட்டு 12 முதலியார்களின் சம்மதத்துடன் நடைமுறைப் படுத்தப்பட்டது. பின்னர் வந்த ஆங்கில ஆட்சியாளரும் 1799ம் ஆண்டுப்பிரகடனத்தின் மூலம் இத்தொகுப்பை நடைமுறையில் ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு இலங்கையின் சட்ட வளர்ச்சிப் பாதையில் சட்ட அறிஞர்களினதும் நீதிபதிகளினதும் விமர்சனங்களையும் விதப்புரைகளையும் ஏற்று வளர்ச்சியடைந்து காலத்திற்குக் காலம் ஏற்படுத்தப்பட்ட சில திருத்தங்களாலும் மாற்றங்களாலும் இன்று ஒரு சீரான சட்டமாகப் பிரதிபலிக்கின்றது.

இலங்கையருக்கு ரோமன் டச்சுச் சட்டமே பொதுவான சட்டமாக இருந்தாலும் கூட திருமணம், சொத்து, பரம்பரைச் சொத்து அடுத்தமைவு போன்ற இன்னோரன்ன விடயங்களைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குட்பட்ட தமிழ் மக்கள் தேசவழமைச் சட்டத்தினாலேயே ஆளப்படுகின்றார்கள். இதில் காணப்படும் சீதனம், சாதிமுறை போன்ற விடயங்கள் ஆதித் திராவிட கலாசாரத்தைப் பிரதி பலிப்பதாக இல்லை, காரணம் இந்து மதச் சட்டங்களையும் மருமகட்டிய வழக்காறுகளையும் கால கதியில் இது ஜீரணிக்க வேண்டியேற்பட்டதால் ஆரியப் பழக்க வழக்கங்கள் சிலவற்றையும் இது ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. ஆனாலும் அண்டையில் வாழ்ந்த சிங்கள சமுதாயத்தின் பழக்க வழக்கங்களையோ சட்டங்களையோ இது தன்னகத்தே ஏற்றுக் கொண்டதற்கான எவ்வித ஆதாரங்களையும் நாம் காண முடிவதில்லை.

தேசவழமையில் பொருள் சார் சட்டம் பேசும், முதிசம், சீதனம், தேடிய தேட்டம், முன்வாங்கும் உரிமை போன்ற விதிகள் அதில் ஏற்படும் பிரச்சனைகளைச் சரியான முறையில் அணுகிப் பரிகாரம் காணும் விதிமுறைகளையும் வகுத்துள்ளது. சீதனம் என்றதும் புரட்சிகர எண்ணங்களாலும், புதுமைக் கருத்துக்களாலும் கவரப்பட்ட இன்றைய முற்போக்கு வாதிகளுள் ஒரு சிலர், இது ஒரு சாபக்கேடு என்றும் சீதனம் பற்றிப் பேசும் தேசவழமை பிற்போக்கு வாதிகளின் நல உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு பழமைத் தத்துவம் என்றும் கூக்குரல் எழுப்பக்கூடும். ஆனால் வாழ்க்கையில் பலருக்கு வேண்டியது சிலருக்கு வேண்டாததாகவும், சிலருக்கு வேண்டியது பலருக்கு வேண்டாததாகவும் இருக்கலாம். ஒருசாரரின் கண்களுக்கு கேவலமாகத் தோன்றும் சீதனம் பெரும்பான்மைத் தமிழ்ச் சமுதாயத்தின் பொருளாதார, சமூக நிகழ்ச்சிகளில் பிரிக்க முடியாத ஒரு அம்சமாக அன்று தொட்டு இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் அதற்கும் தேசவழமைச் சட்டம் பரிகாரம் கண்டுதான் ஆகவேண்டியதாயிற்று.


தேசவழமையில் சொத்து, திருமணம் சம்பந்தமான சில ஏற்பாடுகள் இயற்கை நியதிக்கு ஏற்புடையதாக இருப்பதைக் காண முடிகின்றது. பிள்ளைகள் இன்றி இறக்கும் மனைவியின் சீதனமும் கணவனின் முதிசமும் அவரவர் வழிக்கே திரும்பவும் சென்றடையும் தன்மையும், வேலியடைக்கும் பொழுது அயலவர் காணிக்குள் நின்று அடைக்கும் உரிமையும் ரோமானியச் சட்டம் போன்று மனுதர்ம அடிப்படையில் பிரச்சனைகளை அணுகுகின்ற தன்மையைப் பிரதி பலிப்பதோடு நீதிவழுவா நெறி முறையோடு, தனக்கெனத் தனியான ஒரு கலாசாரத்தோடு வாழ்ந்த இனம் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. இதன் காரணமாகத்தான் எங்கிருந்தோ வந்து எம்மை ஆண்டவர்கள் இச்சட்டத்தை வளம் படுத்த முயன்றார்கள். ஆனால் இங்கிருந்தே எம்மை ஆள்பவர்கள் இன்று இதைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது இச்சட்டத்தின் சிலஷரத்துக்களைச் சரியான முறையில் புரிந்துகொள்ளாத தன்மையோ அன்றேல் பிரதேச வரம்பிற்குட்பட்ட, தமிழனுக்கு மட்டுமே உரித்

**அ. முத்துக்கிருஷ்ணன்**
**சட்டத்தரணி**

தான தனியார் சட்டமான இது அவர்களின் தனித்துவத்தையும் கலாசாரத்தையும், பண்பாட்டையும் இன்றுவரை பிரதிபலிக்கின்றமையை மறைப்பதற்கு எடுக்கப்படும் மறைமுக முயற்சியோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

தேசவழமைச்சட்டம் வடமாகாணத்தில் எந்தச் சாகியத்தாரும் ஒரு அசையாச் சொத்தை வாங்குவதற்கோ, விற்பதற்கோ தடைவிதிக்கவில்லை. ஒருமுஸ்லிமோ, பறங்கியரோ அன்றேல் ஒரு சிங்களவரோ அவர் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படாது விட்டாலும்கூட அவர் ஓர் காணியை வாங்கலாம், விற்கலாம். ஆனால் எல்லைகள் வரையறுக்கப்படாததும், நிந்தப்படுத்தப்படாததுமான ஓர்சொரியல்காணியை அவர் தமிழராக இருந்தாலென்ன வாங்குவதிலும் விற்பதிலும் சில முன்வாங்குமுரிமை விதிகளை தேசவழமைச் சட்டம் வகுத்துள்ளது. அதாவது அதை வாங்குவதில் முன்னுரிமை பெறுபவர் ஒன்றில் வாரிசாக இருக்கவேண்டும். இன்றேல் கூட்டுச் சொந்தக்காரராக இருக்கவேண்டும். அன்றேல் அ[illegible] பிடித்த பக்கத்துக் காணிக்காரராக இருக்கவேண்டும். காணியின் விற்பனையில் மட்டுமே இப்பிரச்னை எழுகின்றது. ஒரு காணிகொடை ஆவணத்தின் மூலம் வழங்கப்படின் இத்தகைய முன்னுரிமை கடைப்பிடிக்கப்பட வேண்டியதில்லை. ஒரு விவசாயக் காணியைச் சொரியல் ஆட்சி செய்யும்கூட்டுப் பங்காளர் இடையில், பல பிரச்னைகளை ஏற்படுத்தும் என்ற காரணத்தால்தான் ஓர் சொரியல் பங்கை அந்நியர் ஒருவர் அறுதி வாங்குவதற்கு வழிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வேற்பாடு எவ்விதத்திலும் ஒரு இனத்தைப் பாதிக்கவுமில்லை; பாகுபாடு காட்டவுமில்லை. அதுமட்டுமல்லாது இப்பிரதேசத்தில் காணியை வாங்குபவரும், விற்பவரும் தேசவழமைச்சட்டத்தால் ஆளப்படுபவராக இருக்க வேண்டும் என்பதில்லை. அவர் ஆளப்பட்டாலும், ஆளப்படாவிட்டாலும் இவ்விதி பொருந்தும். எனவே யாழ்ப்பாணக் குடாநாட்டிலோ அன்றேல் முல்லைத்தீவு, வன்னி, மன்னார் போன்ற இடங்களை உள்ளடக்கிய பிரதேசங்களிலோ வேறு இனத்தவர் அசையாச் சொத்துக்களை வாங்கமுடியாதுஎன்ற வாதம் விதண்டாவாதமேயொழிய வேறில்லை. அதுமட்டுமல்ல முன்னுரிமை விதி தேசவழமைச் சட்டத்திற்கு மாத்திரம் புதியதல்ல. கி. மு. 2200 ஆண்டுகளுக்கு முன்னரே மோசேஸ் தீர்க்கதரிசியின் காலத்தில் இருந்தே இவ்விதி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்மொழி உலகத்தில்பல இடங்களில் வழக்கில் இருந்தாலும் கூட, ஈழத்துத் தமிழில் ஒரு தனி அழகு உண்டென்பதை மறுப்பார் எவருமிலர். இவ்வாறு பேசும் தமிழிலும், வாழும்முறையிலும் வாழ்க்கை அமைப்பிலும் தனக்கென ஒரு தனிப்பெருமையைத் தேடிக்கொண்ட ஈழத்தமிழனின் தனிததுவத்தை எடுத்துக்காட்டி நிற்கும் தேசவழமைச் சட்டத்திற்கு ஒரு சோதனை வந்தால் அது தமிழ் இனம் முழுவதற்குமே ஒரு வேதனைதான், தேசவழமைச் சட்டம் தமிழ்மக்களின் பாரம்பரியச் சொத்து அதைத் தகுந்த காரணமெதுவுமின்றி மாற்றியமைக்க முன்வரின் அது நீதியும், நியாயமுமற்ற அதிகாரத் தீர்வாகும், அதற்கு அடிப்படையுமில்லை, ஆதாரமுமில்லை.




## நாடோடிக் கதைகள்

தமிழில்: நீர்வை பொன்னையன்

### மோசடி

ஒரு குரங்காட்டி அநேக குரங்குகளை வைத்திருந்தான். அவன் அவற்றின் மீது அதிக அக்கறையுடையவனாக இருந்தான். அவனால் குரங்குகளைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்ததுடன் அவைகளும் அவ்வாறேயிருந்தன.

உண்மையில் குரங்காட்டி தனது குடும்பத்துக்கான உணவில் ஒருபங்கை மிச்சம்பிடித்துக் குரங்குகளுக்கு வழங்கினான். இதனால் அவனது வீட்டிலுள்ளவர்களுக்குப் போதிய உணவு இல்லாத நிலைமை ஏற்பட்டது. எனவே குரங்குகளுக்குக் கொடுக்கும் உணவில் ஒரு பகுதியை வெட்ட அவன் எண்ணினான்.



குரங்குகள் இதற்கு உடன்படமாட்டா என்று அவன் அஞ்சினான். அப்படியிருந்தும் அவன் தனது முயற்சியைக் கைவிடவில்லை.

''காலையில் மூன்று வித்துக்களும் மாலையில் நான்கு வித்துக்களுமாக உங்களில் ஒவ்வொருவருக்கும் நான் தருவேன். அது போதுமா?'' — குரங்குகளை அவன் கேட்டான்.

தங்கள் கோபத்தை வெளிப்படுத்துவதற்கு எல்லாக்குரங்குகளும் துள்ளியெழுந்தன.

'சரி, காலையில் நான்கு வித்துக்கள், மாலையில் மூன்று. சரிதானே?''

அப்பொழுது குரங்குகள் நன்கு திருப்தியடைந்து தரையில் அமைதியாக இருந்தன.

### காமாலைக் கண்ணன்

ஒரு மனிதனுக்குத் தங்கம்

தேவைப்பட்டது. ஒரு நாள் காலை அவன் பகட்டாக உடை தரித்துக் கொண்டு சந்தைக்குப் புறப்பட்டான். அங்கு ஒரு தங்க வியாபாரியின் கடைக்குச் சென்று, ஒரு தங்கக் கட்டியைத் திடீரென எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

''இவ்வளவு பெருந்தொகையான மக்கள் முன்னிலையில் நீ ஏன் திருடினாய்?''

— அவனைக் கைதுசெய்த அதிகாரி கேட்டார்.

''நான் தங்கக்கட்டியை எடுக்கும் பொழுது, நான் எவரையும் காணவில்லை; தங்கக் கட்டியை மாத்திரம் தான் கண்டேன்''.

அவனது பதில் அதிகாரிக்குப் புரிந்ததோ என்னவோ, அவன் தங்கம் திருடியவனைப் பிடித்துக் கொண்டு தனது அலுவலகத்திற்குச் சென்றான்.

### மூளைசாலி

சிவில் நிர்வாகப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒருவன் தலைநகருக்கு வரும் வழியில் தனது தோல்பையைத் தொலைத்து விட்டான்.

''ஒரு திருடன் எனது தோல்பையைத் திருடிச் சென்றாலும் அதற்குள் உள்ள பொருள்களை அவனால் தொடக்கூடமுடியாது'' — அமைதியாக அவன் கூறினான்.

ஏன் என்று மற்றொருவன் கேட்டான்.



''இப்பொழுதும் என்னிடம் தானே அந்தத் தோல்பையின் திறப்பு இருக்கின்றது. எதனால் அவன் பையைத் திறக்கப் போகின்றான்?'' — அவன் கூறினான்.

அவனது 'அபார' மூளையைக்கண்டு எல்லோரும் சிரித்தனர்.


## கதிர்காமருக்கு ஒருமடல்

கதிர்காம வேலவனே கதியற்றோர் காவலனே
கருணையுடன் ஒன்று கேளும்
மிதித்தாலே உன்மண்ணில் வினைதீரும் என்று தமிழ்
மாந்தர்கள் அன்று தொட்டு
நதியென்ன காடென்ன, நடந்தே உன் இடம் வந்தார்
'அழைத்தாய்' நீ அங்கே என்று
அதிவேக ஊர்திகள்பின் வந்திடவே அடியாரும்
ஆயிரமாய் வந்து துதித்தார்
தமிழ்வளர்த்த கோமானே தீயவரின் நீசனே அத்
தமிழர்கள் இன்று எங்கே?
தமிழ்த் தெய்வம் உறைகின்ற கதிர்காமத் திருமண்ணில்
தமிழன்கால் இன்று படுமோ?
அமிழ்தன்ன வள்ளியொடு ஆடல்புரி ஏழுமலை
என்றெமக்குக் காண வருமோ?
குமிழன்ன நகையுடையாய் குறமகளைக் கூடுதற்கோர்
தமிழ்மண் கிடைக்க விலையோ?
இன்தமிழில் பிறந்திட்டோம் இதைவிட ஓர்தவறறியோம்
இதற்கோகாண் இக்கொடுமைகள்?
புன்செயலார் புரிவினையால் பொற்தமிழர் வாழ் இடங்கள்
பிணக்கடலாய் மாறிவிட்ட தே!
வன்செயலால் உயிரிழந்து வீடிழந்து பொருளிழந்து
வெம்பும் நிலை வந்து விட்டதே!
பன்னிருகை வேலெடுத்து, வேழமென, மாறுபடு
சூரனை வதைத்த குமரா
துட்டர் நிக்கிரக சிஷ்டபரி பாலனம் உன்
தீராத கடமை யன்றோ
திட்டமிட்டு அழிக்கின்ற தீவினைகள் ஓங்கையில் உன்
தேரென்ன குடை சாய்ந்ததோ?
பட்டதுயர் போதும் இனிப் பொறுப்பதற்கும் நீதியுண்டோ
பார்நகைக்க நாம் வாழ்வதோ?
கட்டொடுநாம் அழிந்திடவோ? கடமை இது எம்மினத்
தைக்
காத்தருள்வாய் கதிர்காமரே!

— அரியாலை சின்னையா துரைச்சாமி

## வன்செயலால் வாழ்விழந்த அநாதைகளுக்கு

# புனர்வாழ்வுப் புனித பணி



'கடுதாசி பொம்மைகள்' தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள்

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான அப்பாவிகளின் குடும்பங்கள்; 'ஷெல், தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் குழந்தைகள்: குண்டு வீச்சினுல் மாண்டு மடிந்தவர்களின் மணேவி மக்கள்; வன்செயலினுல் வாழ்வை இழந்தவர்களின் வாரிசுகள்; கலவரத்தால் காணுமல் போனவர்களின் பிள்ளேகள் இன்று எப்படி வாழுகிருர்கள்? இருள் சூழ்ந்த அவர்களின் வாழ்வில் எதிர்காலத்தில் ஒளிமயம் ஏற்பட இடமுண்டா?

தினமும் ஒரு தமிழ் மகன் வடக்கிலோ, கிழக்கிலோ வன்செயலுக்கு இரையாகிவருகிருன். இதனுல் தமிழ் பெண்கள் அநாதைகளாக, அகதிகளாக, விதவைகளாக மாறி வருகின்றுர்கள்.



பனே ஓலேப் பொருள்கள் செய்வதில் பயிற்சி பெறுகின்றுர்கள்

தமிழினத்திற்காக தன் உயிரை அர்ப்பணித்த அந்த அப்பாவிகளின் குடும்பத்திற்கு, உதவி செய்ய இன்று பல பொது அமைப்புகள் முன்வந்துள்ளன. இதனுல் குடும்பத் தலேவனே இழந்த குடும்பங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

துயர் துடைக்கும் பணியில் 'தமிழ் மகளிர் அவை' யாழ். நகரில் இப்படியான சில பாதிக்கப்பட்ட தமிழ் பெண்களின் குடும்பங்களுக்கு கைத்தொழில் நிலேயத்தை நிறுவியுள்ளது.

இந்த நிலேயத்தில் பொம்மை தயாரிப்பு தையல் பயிற்சி பனே ஓலேப்பொருட்கள் தயாரிப்பு ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்டுகிறது. பயிற்சி பெறும் போதே சம்பளம் வழங்கப்படுகிறது. இங்கு 8 பெண்கள் பயிற்சி பெறுகின்றுர்கள். இங்கு பயிற்சியளிக்கும் ஆசிரியைகள் மற்றும் தொழில்களிலும் பயிற்சி பெறுகிருர்கள்.

இந்நிலேயத்தில் பொம்மை தயாரிப்பதில் பயிற்சியளிக்கும் சி.செல்வராணியின்சகோதரர் தங்கத்துரையை கல்முனேயில்கட்டடத்திணேக்களத்தில் வைத்து கைதுசெய்தனர். அவர் வீடு திரும்பவில்லே. குடும்பபாரத்தை பொறுக்பேற்க வேண்டிய நிலே அவருக்கு ஏற்பட்டது.

இவர் 1979ம் ஆண்டு சிறு கைத்தொழில் பிரிவின் கீழ் மொறட்டுவையில் பொம்மை தயாரிப்பதில் பயிற்சி பெற்றுர். துணியிலும், பேப்பரிலும் அழகான பொம்மைகள் தயாரிப்பதில் பயிற்சி பெற்றிருந்தார்.

மொறட்டுவையில் பயிற்சி பெற்ற பின் வேலே கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தார். சிறிது காலம் திருநெல்வேலியில் பொம்மைகள் தயாரிப்பதில் ஈடுபட்டார். இப் பொம்மைகள் லக்சலாவிலும் திருவிழாக்களிலும் விற்பனேயாகின. அதன் பின் வேலே யில்லாமல் இருந்தார்.

இந்த நிலேயத்தில் இவருக்கு தினம் 30 ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. மற்றும் தையல் பயிற்சி ஆசிரியைகளுக்கும் இதே சம்பளம்தான். இங்கு பயிற்சி பெறும் மாணவிகளுக்கு தினம் தலா 20 ரூபா வழங்கப்படுகிறது.

பொம்மைகள் தயாரிப்புப் பற்றி ஆசிரியை செல்வராணியிடம் கேட்டபோது பிளாஸ்டிக் பொம்மைகளே அமைத்து அச்சில் போட்டு எடுத்து கடுதாசித்துண்டுகளேப் பசையின் உதவியுடன் மிக நுணுக்கமாக ஒட்டி பின்பு அழுத்தமாக கரடு முரடு இல்லாதவாறு பொம்மைகளே உருவாக்க வேண்டும் என்றுர்.

ஒரு நாளேக்கு 15 உருவங்கள் எடுக்கலாம் என்றும் நல்ல வெய்யில் இருந்தால் அடுத்த நாள் வெட்டலாம் என்றும் கூறினுர் செல்வராணி.

இங்கு தயாரித்த சில பொம்மைகளேயும் காட்டினுர். நல்ல தரத்துடன் அழகாகவும் இருந்தன. குழல் ஊதும் கிருஷ்ணன் பொம்மை அழகாக இருந்தது.

''இந்நிலேயத்தில் எப்போ சேர்ந்தீர்கள்?'' என்று கேட்டேன் ''86ஜனவரியில் இங்கு வந்தேன்'' என்றுர்.

''துணி பொம்மைகள்இங்கு செய்வதில்லேயா''

''தற்போது கடுதாசி பொம்மைகள் தான் செய்கின்ரும்'' என்றுர்.

இந்நிலேயத்தின் நிர்வாகப் பணிப்பாளர் இரா.முருகையா பாதிக்கப்பட்ட இப்பெண்களே தேடிக்கண்டு பிடித்து அவர்கள் வாழ்விற்கு வழி தேடிக் கொடுத்தவர் இவரே.

வேறு தொழில்கள் கற்றுல் வீட்டில் இருந்தே பொருட்களேச் செய்யலாம் என்றும் அதனுல் தான் தையல் ஆசிரியை, பொம்மை தயாரிப்பு, பனம் ஓலே வேலேகளிலும் பயிற்சி பெறுகின்றுர் என்றும் இதே போல் மற்றும் ஆசிரியைகளும் பயிர்சி பெறுவதாகவும் திரு. முருகையா சொன்னுர்.

இங்கு பணியாற்றும் ஆசிரியைகளேயும் பயிற்சி பெறும் மாணவிகளேயும் எனக்கு அறிமுகம் செய்து வைத்து அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களேயும் சுருக்கமாக விளக்கினுர். மூதூரைச்சேர்ந்தவர் தையல் ஆசிரியை திருமதி த. ஜெகதீஸ்வரி 85-ம் ஆண்டு ஜூன் மாதம் இவருடைய தம்பி ரகுநாதன்வேலேக்கு சென்றவர் வீடுதிரும்பிவரவில்லே. மூதூரில் இவரது வீடுஎரிக்கப்பட்டதால், காட்டில் தஞ்சமடைந்து 5 பிள்ளேகள், சகோதரியுடன், யாழ்ப்பாணம் வந்து உறவினர் வீட்டில் தங்கியுள்ளார். 85 நவம்பர் இந்நிலேயத்தில் சேர்ந்தார்.

மற்றெரு தையல் ஆசிரியை மானிப்பாயை சேர்ந்த ஞா. மல்லிகாதேவி (25 வயது இவரது கணவர் எட்டுமாதத்திற்கு முன்காணமல்போய்விட்டார். பல இடங்களிலும் தேடியும் பலன் கிடைக்கவில்லே. இவர் 85-ம் ஆண்டு ஆகஸ்ட் 8-ம் தேதி வவனியாவுக்கு சென்றபோது காணுமல் போய்விட்டார். இவருக்கு குழந்தை இல்லே. காணுமல் போனகணவர் கிளிநொச்சியை சேர்ந்தவர். மல்லிகாதேவி 81-ம் ஆண்டு தையலில் டிப்ளோமா பெற்றுள்ளார்.

பனம்ஓலே பொருட்கள் தயாரிப்பதில் பயிற்சியளிப்பவர் திருமதி ஆர். சண்முகநாதன். பனம் பொருள் அபிவிருத்தி சபை இங்கு பயிற்சியளிக்க இவரை தந்துஉதவியுள்ளது.

இங்கு பயிற்சி பெறும் மாணவிகளே சந்திப்போம்.

குருநகரைச் சேர்ந்தவர் திருமதி டி. அல்போன்சா [32 வயது]. இவருக்கு ஒரு குழந்தை உண்டு. இவரது கணவர் தொழிற்சாலேயில் இருக்கும் போது இரவு சுடப்

**கா. யோகநாதன்**

பட்டு பலியானுர். 85 நவம்பரில்இங்குஇவர்சேர்ந்துள்ளார்.

யாழ். வீதியை சேர்ந்தவர் எம். சசிகலா (16 வயது) தனியார் பஸ் ஒன்றில் சாரதியாக இருந்த இவரது சகோதரன் யாழ். நகரில் துப்பாக்கி சூட்டுக்கு பலியானுர். இதனுல் இவர் கடந்த மாதம் இந்த நிலேயத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றுவருகிருர்.

ஈச்சமோட்டையை சேர்ந்தவர்திருமதி அ.பெனிக்கா [வயது 30]. இவருக்கு இரு பிள்ளேகள் இருவரும்படிக்கிருர்கள். இவருடைய கணவன் 85 மே மாதம் கொழும்புக்கு சென்றவர் வீடுதிரும்பவில்லே. இவருடைய கணவன் மே 15-ம் திகதி அநுராதபுரம் மட்டும் வாரண்ட் எடுத்துள்ளார். பெருந்தெருக்கள் திணேக்கள யாழ். பிரிவில்பணியாற்றினுர். கொழும்புத்துறையை சேர்ந்தவர்.

செல்வி ஏ. திரேஸ்ரோசினி [24 வயது] இவருடைய சகோதரர் அன்ரன் பிலிக்ஸ் வீட்டில் வைத்து சுடப்பட்டார். மற்றெரு சகோதரர், ஜெபின்சன் குரோஸ் நான்கு மாதங்களாக கைதுசெய்து விசாரணே செய்யப்பட்டார். அவர் இப்போ பயத்தினுல் வெளிநாடு அகதியாக சென்று விட்டார். தாயார் சுகயீனமானவர் இவர் கொழும்புத்துறை மணியம் தோட்டத்தில் வசிக்கிருர்.

அரியாலேயை சேர்ந்தவர் சனிசுயாதேவி [18 வயது] இவருக்கு மூன்றுமாதகுழந்தை ஒன்றுண்டு 'மேசன்' வேலே செய்யும் கணவன் 85 ஆகஸ்ட் 28-ம் திகதி அரியாலே குண்டு வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து நடந்த துப்பாக்கி சூட்டில் பலியானுர். தினமும் பயிற்சி பெறும்போது கிடைக்கும் 20 ரூபாவில் சீவியம் நடாத்திவருகின்றுர்.

பயிற்சி பெறும் மாணவிகளுக்கும் ஆசிரியைகளுக்கும் சிழமைக்கு 1000 ரூபா சம்பளமாக வழங்கப்படுகிறது.

பயிற்சி முடிவடைந்ததும், பயிற்சிபெற்ற மாணவிகள் மூலம் கிராமங்களில் இது போன்ற கைத்தொழில் நிறுவனங்களே ஆரம்பித்து அங்கு வன்செயலால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பயிர்சி அளிக்க திட்டமிட்டிருப்பதாக நிர்வாக பணிப்பாளர் இரா முருகையா தெரிவித்தார். தமிழ் மகளிர் அவையின் இத்திடடம் ஒருநல்ல முயற்சி மட்டுமன்றி தமிழினத்திற்கு செய்யும் பெரும் சேவை யுயாகு

## ஈழத்தமிழிலக்கிய சஞ்சிகை வரலாற்றில்

# 'புதுசு'வின் பண்பும் பணியும்

**கலாநிதி நா. சுப்பிரமணியம்**

[முன் தொடர்ச்சி]

கடந்த ஆறு ஆண்டுகளாக ஈழத்துத் தமிழிலக்கியத்தின் புதிய செல்நெறியை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைப் புதுசு செய்து வந்துள்ளது. இவ்வகையில் அது தனக்கு ஒருவகையில் முன்னேடி எனக் கருதத்தக்க அலேயுடன் பல அம்சங்களிற் பொதுத்தன்மையினேக் கொண்டதாகத் திகழ்ந்தாலும் குறிப்பிடத்தக்க சில அம்சங்களில் தனக்கெனத்தனிப்பட்ட நிலேப்பாடுகளேயும் தெளிவுபடுத்திநிற்கிறது. இது கலே இலக்கியம் என்பன பற்றியும் சமூக - அரசியற் பிரச்சினேகள் பற்றியும் அலே, புதுசு இரண்டும் கொண்டிருந்த கருத்துக்களில் தெளிவாக வெளிப்படுகின்றது. கலே என்பது அநுபவ வெளிப்பாடாகத்தான் இருக்கவேண்டுமென்பதில் அலே, புதுசு இரண்டும் ஓரணியில் நிற்கின்றன. எனினும் கலேயைச் சுவைத்தல், உருவம் உள்ளடக்கம், இருத்தலியல்வாதம் முதலிய சிந்தனே சார்பான அம்சங்களுக்கு அலே அதிக அழுத்தம் கொடுத்துவந்துள்ளது. ஆனுல் புதுசு, கலே இலக்கியத்தின் சமூகப்பயன்பாடு, போராட்டச் சூழ்நிலே படைப்பாளியின் பங்களிப்பு என்பன தொடர்பான நடைமுறை அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவந்துள்ளது. இம்முக்கியத்துவமே ஆந்திரப்பிரதேசத்தில் நிகழ்ந்த விவசாயிகளின் ஆயுதமேந்திய போராட்டங்களில் முன்னணியில் நின்ற 'திகம்பர கவி' செரபண்டராஜு, சுப்பாராவ் பாணிக்ரஹி என்போர் தொடர்பான விடயங்களேப் புதுசு எடுத்தாண்டுள்ளமைக்குக் காரணமாகும்.

சமூக அரசியற் பிரச்சினேகளேப் பொறுத் வரை குறிப்பாகத் தேசிய இனப்பிரச்சினே தொடர்பாக அலே, புதுசு இரண்டும் அழுத்தமான கருத்துக்களே முன்வைத்து வந்துள்ள போதும் இரண்டின் பார்வைகளுக்கிடையிலும் வேறுபாடுண்டு. இது அவற்றின் பார்வை வேறுபாடு மட்டுமல்ல தள வேறுபாடும்மாகும். அலே [26] ''தமிழ் பேசும் மக்களின் அரசியற் பிரச்னேகளே உயிர்ப்புடன் பேணிக்காத்தது தமிழரசுக் கட்சியேயாகும். அந்தவிதத்தில் வரலாற்றில் அதற்கோர் முற்போக்குப்பாத்திரம் உண்டு.'' எனக்கருதுகிறது, ஆனுல் புதுசு ''தமிழரசுக் கட்சியையும் உள்ளடக்கிய தான தமிழர் விடுதலேக்கூட்டணி வெறுமனே தமிழீழ லேபல் [பெயரளவிலான] மாற்றத்தை மட்டுமே நோக்காகக் கொண்டிருந்தது எனக் கருதுகிறது [புதுசு - ை] புதுசுவின் கருத்துப்படி தமிழ்மக்களின் விடுதலே என்பது வெறும் பெயரளவிலான ஆட்சி மாற்றத்தால் ஏற்படக்கூடியதொன்றல்ல; சமூக பொருளாதாரபண்பாட்டம்சங்களில் முழுமையான விடுதலேயுடனேயே ஏற்படும்

இவ்வாறு அலே, புதுசு இரண்டிற்குமிடையிற் காணப்படும் இக் கருத்துநிலேயிலான வேறுபாட்டு அம்சங்களே அவற்றின் படைப்பாக்கங்களே நுனித்து நோக்கியும் கண்டுகொள்ளல் சாலும். அது தனி ஆய்வாக விரியும்.

புதுசு சஞ்சிகையின் போக்கை ஈழத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பகைப்புலத்தில் பொருத்திநோக்கும் பொழுது கடந்த முப்பதாண்டுகட்கு மேலாக உருவாகி வளர்ந்து வந்துள்ள இலக்கியத்தின் சமுதாயப்பணி தொடர்பான பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி போன்ற முற்போக்குச் சிந்தனுவாதிகளின் கருத்துநிலேயின் தர்க்கரீதியான வளர்ச்சியாகவும் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக முனைப்புப் பெற்றுவரும் கலே அநுபவம் தொடர்பான சிந்தனேகளின் பரிணுமமாகவும் புதுசு திகழ்வதை அவதானிக்கமுடிகிறது. முற்போக்குச் சிந்தனுவாதிகளுடன் அவ்வப் பொழுது புதுசு முரண்பட்டுள்ள போதிலும் அம் முரண்பாடு முக்கியமாகத் தேசிய இனப்பிரச்சினே தொடர்பான அவர்களின் அணுகுமுறை தொடர்பானதே அன்றி இலக்கியத்தின் சமுதாயப்பணி தொடர்பானது அல்ல.

இவ்வகையில் இலங்கையின் தமிழ்மக்களால் முகங்கொள்ளப்படுகின்ற சமூக அரசியற்பிரச்சுனேகளே படைப்பிலக்கிய ரீதியாக அணுகும் முயற்சியில் காத்திரமான பங்களிப்புச் செய்யக்கூடிய சரியான தளத்தைப் புதுசு அணுகிக் கொண்டிருப்பது தெரிகிறது. இதனே இனிவரும் புதுசுகள் நிருபணமாக்கும் என நம்பலாம்.

[முற்றும்]

# 'புதிய தடுத்து வைத்தல் வரி' தவிர்க்க முடியாதா?

[முன் தொடர்ச்சி]

முன்னைய கட்டுரையில் புதிய வரிச் சலுகைகளையும், புதிய 20% தடுத்து வைத்தல் வரியையும் இணைத்து சில சூழ் நிலைகளில் வைத்து ஆராய்ந்த போது இருபது சத வீதக் கழிவு அதிகமாக இருக்கக் காணப்பட்டது. இவ்வாண்டு தொடக்கம் வட்டி வீதம் சரி யத் தொடங்கி இருக்கும் வேளையில் இவ்வரிக் கழிவை ஓர் புதிய கோணத்தில் இருந்து நோக்கும் அதே வேளை யில் இதன் பிடியிலிருந்து விலக ஏதாவது வழி உண்டா என்று கவனிப்பது நல்லது.

1985 ம் ஆண்டு இறுதிவரை 24 வீதம் தொடக்கம் 30 வீதம் ஆக இருந்த வட்டிவீதம் இந்த ஆண்டு ஆரம்பத்தில் கிட்டத்தட்ட அரைவாசி அதாவது 12 வீதம் வரை வீழ்ந்துள்ளது. இதற்கு பொதுவாக அதிகரிக்கும் பணப்புழக்கம் ஓர் காரண மாக இருந்த போதும் ஒரிரு மாதங்களில் ஏற்பட்ட இந்த திடீர் வீழ்ச்சிக்கு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வர இருந்த புதிய 'தடுத்து வைத்தல் வரியே' முக்கிய காரணியாக அமைந்திருந் தது என்பதை எவரும் மறக்க முடியாது.

முன்னர் 24.000 ரூபாவை வட்டி வருமானமாகப் பெற 100 000 ரூபாவை நிலையான வைப்பில் வைத்திருந்த ஒரு நபர் அதே 24.000 ரூபாவை இப்போது வட்டி வருமான மாகப் பெற 200,000 ரூபாவை முதலீடு செய்திருக்க வேண் டும். ஏப்ரல் மாதம் தொடக் கம் சராசரியாக 15 வீதம் வட்டி வருமானம் முதலீட் டாளர்களுக்கு கிடைக்கும் என எதிர்பார்த்தால் ஒரு நபர் வரிக்கழிவு, வரிக் கொடுப்பனவு, முதலீடு செய்திருக்க வேண்டிய தொகை என்பனவற்றை பின் வரும் அட்டவணை விளக்குகின்றது.

பட்டது யார் யாருக்கு குறை வாக அமைகின்றது என்பதை நோக்கலாம்.

1. இப்புதிய வரிவிதிப்பின் பாதிப்பை அறியாத சிலர், பயத்தின் காரணமாக, வைப் புக்களை வெளியே எடுக்கத் தொடங்கியுள்ளனர். மற்றும் சிலர் (இதுவரை வட்டி வரு மானத்திற்குரிய வரியைச் செலுத்தியவர்கள்) புதிய வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் நன்கொடை வரி நீக்கப்பட் டுள்ளதால், தங்கள் முதலீடு களைத் தங்கள் பிள்ளைகள், இனத்தவர்கள் பெயர்களுக்கு மாற்றி வைப்புச் செய்கின்ற னர். இவ்வகையானோரைப் புதிய வரி பாதிக்காது.

(2) இன்றும் சிலர் இச் சட்டத்தின் பிடிக்கு உட் படாத வைப்புக்களில் முத லீடு செய்யத் தொடங்கி யுள்ளனர். வைப்புச் சான்றி தழ் (certificate of Deposit) என்ற வைப்பு முறை பல வங்கிகளாலும் தற்போது விளம்பரப்படுத்தப்பட்டு வரு

ந. கருணைஆனந்தன்

கின்றது. இந்த முதலீட்டினால் கிடைக்கும் வருமானத்தை புதியவரி பாதிக்காது.

(3) வேறுசிலர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் N R. F. C. A/C) தமது வெளி நாட்டு ஊதியத்தின் ஒரு பங்கினை வைப்புச் செய்கின் றனர். இவ் வைப்பிலிருந்து பெறப்படும் வருமானம் வரி விலக்குக்கு உரியது.

(4) ஏனையோர் பின்வரும் தகைமைக் கொடுப்பனவுகளை [Qual fying payments] வரு மானத்தின் மூன்றில் ஒரு பங்கு வரை கழித்து, தம் வரிக் கொடுப்பனவுகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

* வீடமைப்புக் கடனுக்காக திருப்பிச் செலுத்தும் தவணைக் கடனும்.
* வீடு அல்லது வீட்டு நிலம் வாங்கிய தொகை.
* ஆயுட் காப்புறுதிக் கட்ட

| வட்டி வருமானம் | 20 வீத வரிக் கழிவு | செலுத்த வேண்டிய வரி |
|---|---|---|
| 27.000 | 5 400 | இல்லை |
| 48 000 | 9 600 | 2 100 |
| 72 000 | 14 400 | 6 900 |
| 75,000 | 15.000 | 7.800 |

| முதலீடு செய்யவேண்டிய தொகை: நிதிநிறுவனம் | தேசிய சேமிப்பு வங்கி |
|---|---|
| 180,000 | 270 000 |
| 320 000 | 480 000 |
| 480.000 | 7 0.000 |
| 500,000 | 750,000 |

இதிலிருந்து நாம் கவனிக்கக் கூடியவை வருமாறு:

* வட்டி வருமானத்தை மாத்திரம் நம்பி இருப்ப வர்கள் வரி கட்டும் எல்லையை அடைய 200.000 ரூபாவிற்கு மேல் முதலீடு செய்திருக்கவேண் டும்.
* தேசிய சேமிப்பு வங்கி யில் வைப்புச் செய்திருப்ப வர்களாயின் (வருமானத் தில் மூன்றிலொரு பங்குக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டி ருப்பதால்) இவர்கள் 300,000 ரூபா வரை முத லீடு செய்திருந்தால் மாத் திரமே வரி செலுத்தவேண் டியவர்களாவார்கள்
* இதனிலும் குறைந்த தொகை வைப்பாளர்களிட மிருந்து 20 சதவீத வரிக் கழிவு செய்யவேண்டிய அவ சியமில்லை.
* வைப்பாளர் வரியிறுப் பாளர்களாயின் அவர்களது வரிக் கொடுப்பனவிலும் பார்க்க வரிக்கழிவு இரண்டு மடங்கிலிருந்து நான்கு மடங்குவரை அதிகமாக உள்ளது.

அடுத்து இப்புதிய வரியின் பாதிப்பு யார் யாருக்கு ஏற் ணம்.

* சகாயநிதி / ஓய்வு நிதிக் கொடுப்பனவு.
* உயர் தொழில் (profession) ஆற்றுபவர்செலுத்தும் சந்தா, சஞ்சிகை, நூல்கள் கொள்வனவு தொகை.
* 30 வயதுக்குட்பட்ட பிள்ளைகளினது வெளிநாட்டு படிப்பிற்காக செலவிடப்படும் தொகை.
* அங்கீகரிக்கப்பட்ட அற நிலையத்திற்கு கொடுக்கப் பட்ட பண நன்கொடை.

எனினும் தற்போது கையி லிருக்கும் சேமிப்பை அல்லது எதிர்காலத்தில் ஈட்டக் கூடிய சேமிப்புக்களை நிலையான வைப்புக்களில் இடாமல் வரி விலக்களிக்கப்பட்டிருக்கும் சிறிய - நடுத்தர கைத்தொழில் களில் முதலீடு செய்தல் அல் லது இத் துறைகளில் புதிய சிறு கம்பனிகளை ஆரம்பித்தல் ஆகிய நடவடிக்கைகள் வரி விதிப்பை தடுக்கும் படிகளாக அமைவது மாத்திரமன்றி. அவ்வப் பிராந்தியங்களை துரித முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் முன்னோடி களாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மேற்படி வழி முறைகளை கைக் கொள்ளாது விடுத்தால் பலவித இக்கட்டான விளைவு களை எதிர்கொள்ள நேரிடும். வைப்புக்களிலிருந்து வெளியே எடுக்கப்படும் பணமும், இனி மேல் ஈட்டப்படும் பணமும் சேமிப்பு வழியினின்றும் விலகி ஓர் பகுதி அன்றாட நுகர்வு செலவீனங்களுக்கு பயன்படுத்தப்படவே வாழ்க் கைச் செலவு மேலும் அதி கரிக்கும் அபாயம் ஏற்படும். அதே நேரம் இன்னுமொரு பகுதி கறுப்புச் சந்தையை நாடி அங்குள்ள பணப்புழக் கத்தை நேரடியாக அதிகரிக்க உதவும் என்பதைக் கூற வேண்டிய அவசியமில்லை.

# போலிச் சந்நியாசி

பாரதியார் புதுச்சேரியில் மறைந்து வாழ்ந்தகாலம். அவரைப்பிடிக்க மாறு வேடங் களில் உளவாளிகள் வந்து உலாவுவது வழக்கம். சந்நி யாசி வேடத்தில் ஒருவர் அப்படி வந்து சேர்ந்தார். பாரதியாரைக் கைகூப்பி வணங்கிவிட்டு 'என்னுடைய ஆச்சிரமத்துக்குப் போகலாம் வா' என்று அழைத்தார்.

'ஐயா' நீங்கள் போலிச் சந்நியாசி என்று நன்றாகத் தெரிகிறது. சந்நியாசிகள் பிறரை வணங்குவதில்லை. பிறர்தாம் அவர்களை வணங்குவது வழக்கம். முத லில் இங்கிருந்து போய் விடுங் கள், என்று பளிச்சென்று கூறினார் பாரதியார்.

—சச்சி

# மணமகள் அழுதுகொண்டிருக்கிறாள்

குட்டிக்கதை

குமார் தனபால்

நான் எவ்வளவு அழகான ஆண்மகன்! என்னைப் பற்றியோ என் அழகைப் பற்றியோ தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டுப் பாருங்கள்.

என் ரூபலாவண்யத்தைப் பற்றி நான் அதிகம் பீற்றிக் கொள்ளவில்லை. சுருக்கமாக ஒரு வரி-

ஆலம் விழுதுகள் போல சுருள் சுருளாகத் தொங்கும் என் தலை முடிகள். . அரிவாள் மீசை என்பார்களே அதே போன்ற அழகான மீசை. சுண்டினால் இரத்தம் கன்றும் எலுமிச்சம்பழ நிறம்!

''ஒரு புறம் பார்த்தால் கமலகாசன், மறுபுறம் பார்த் தால் ரஜனி காந்த் - இன் னொரு புறம் பார்த்தால் விஜயகாந்த் ...!'' என என்னைப்பார்க்கும் நண்பர்கள் புளுகிக் கொள்வார்கள்!

இப்படிப்பட்ட மன்மதக் குஞ்சனான நான் அந்த மண்டூ சத்தை மணம் முடித்துத் தெருவில் உலாவர முடியுமா?

''மச்சான்! உன் அழகிற்கு ஒரு ஸ்ரீதேவியோ ஒரு ஸ்ரீப் பிரியாவோ அல்லது ஹிந்தி நடிகை ஜீனத் அமனோதான் ஜோடியாகவந்தால் பொருத்த மாக இருக்கும்'' என்பார் களே!

இப்படிப்பபட்ட ஓர் அழ கனுக்கு என் பெற்றோர்கள் மணமகள் பார்த்திருக் கிறார்களாம். குருட்டு ஜென்மங்கள்! பெண்ணா அவள், பேய்! கண்களோ கெளுத்து மீன் மாதிரி. புயலில் அகப் பட்ட வைக்கற் கும்பி போன்ற தலை. இதற்குமேல் அந்த அசிங்கத்தைப் பற்றி வர்ணிக்க நான் தயாராக இல்லை.

சீச்சீ! நாளைக்கு அந்த அவ லட்சணத்திற்கும்ஆணழகனான எனக்கும் நிச்சயதார்த்தமாம். மண்ணாங்கட்டி நிச்சயாத்தம் இன்றே அதை நிறுத்தியாக வேண்டும்.

என் முடிவானமுடிவைத் தெரிவிக்க விறுக்கென வீட் டுக்குள் விரைந்தேன்.

''அதோ அவனே வந்து விட் டான். கடிதத்தை அவனிடம் கொடுங்கள் படித்துப் பார்க் கட்டும்''- அம்மா கூறினாள். அப்பா கடிதத்தை என்முன் நீட்டினார் படித்தேன்... படி. .த்தேன் படி.

''மணமகளின் பெற்றோர் கள்எழுதுவதாவது. உங்கள் மகனை எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆனால் எங்கள் மகள்தான் மணமக னின் மீசையையும் தலையை யும் பார்க்கப்பயமாக இருப் பதாகச்சொல்லி தனக்கு அந்த மாப்பிள்ளை வேண்டாமென அழுது கொண்டிருக்கிறாள். தயவுசெய்து திருமண ஏற்பாடு களை நிறுத்தவும் சிரமத்திற்கு மன்னிக்கவும்''.

# தொடர் நவீனம்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

என்னென்ன விதங்களில் எல் லாம் அவர்கள் மாற்றம் அடைந்து விட்டாலும், அந் தப்புதினங்களை ஆராய்வதி லும் இல்லாததும் பொல்லாத தும் கதைப்பதிலும் எந்தவித மாறுதல்களும் அடையவில்லை. உயர்ந்த குடும்பங்கள் என் றால் என்னவேறு குடும்பங்கள் என்றால் என்ன இப்படியான விடயங்களைக் கதைப்பதில் அதிக மகிழ்ச்சியடைபவர்கள் அவர்கள்

கந்தையர் தங்கலட்சுமியிடம் வந்து வசந்தமலர் பற்றி சதைத்து விட்டு போனபிறகு, தாயும்பிள்ளைகளுமாக அது பற்றி கதைத்தார்கள்.

''வசந்த மலருக்கு உங்கள் வீட்டில் அடைக்கலம் கொடுங் கள் என்று கந்தையர் சொன் னதை கேட்டபோது தங்க லட்சுமி ஏதும் சொல்லவில்லை. அதற்கு அடிப்படையான காரணம் ஒன்று இருந்தது, வசந்தமலரை தங்கள் வீட் டில் தங்கவைப்பதற்கு தங்க லட்சுமிக்கு விருப்பம் இருந் தது. ஆனால் தனது பிள்ளை களுடன், அதுபற்றி கதைத்து முடிவு செய்த பின்னர் தான் கந்தையருக்கு சொல்ல நினைத் தாள்.

வசந்தமலரை தங்கள் வீட் டுக்கு கொண்டுவந்தால் வீட்டு வேலைகளை அவள்மேல் சுமத்தி விடலாம் பிறகு தானும் பிள்ளைகளும் பிரச்னையில்லா மல் இருக்கலாம். வேலைக்கு கூட ஒருபெண்ணை வைத் திருந்தால் சாப்பாடும் சம்பள மும் கொடுக்க வேண்டும். வசந்தமலராக இருந்தால் சம்பளம் கொடுக்க தேவை யில்லை. சாப்பாட்டுடன் விட யத்தை முடித்து விடலாம். என்பது தங்கலட்சுமியின் திட்டம்.

தங்கலட்சுமியின் பெண் களும், வசந்தமலர் தங்கள் வீட்டுக்கு வருவதற்கு விருப் பம் தெரிவித்தார்கள். தங்க லட்சுமிக்கு இருந்த உள் நோக்கமே அவர்களுக்கும் இருந்தது.

வீட்டுக்கு ஒரு வேலைக்காரி பிடிப்பது போல வசந்த மலரை தங்கள் வீட்டுக்கு அழைக்க, அவர்கள் முழுச்சம் மதம் தெரிவித்தார்கள். ஆனால் அதற்கு அவர்கள் தாங்கள் ஏதோ பெரிய தியா கம் செய்வது போலவும், அபலைப் பெண்ணுக்கு ஆதர வளிப்பது போலவும் பேசிக் கொண்டார்கள். அவ்வாறே மற்றவர்களும் எண்ண வேண் டும் எனவும் விரும்பினார்கள்.

இந்த முடிவுடன் தங்கலட் சுமி கந்தையரைக் காண்பதற் காக அவர் வீட்டுக்கு சென் றாள். [வளரும்]

# பொருட் சிறப்பு

மலையின் பாறைகளில் மாணிக்கம் பிறக்கும். காதலி யின் சொற்களித் களிப்புப் பிறக்கும். அருள் நிறைந்தால் அறநெறி பிறக்கும் பொருள் நிறைந்தால் எல்லாம் பிறந்து விடும்;

-நான் மணிக்கடிகை

# வாழ்க்கை

வாழ்க்கை என்பதன் வரை விலக்கணம்
வேதாந்தி சொன்ன தத்துவ விளக்கம்
துன்பப் பிடியின் துயரப் படுக்கை
இன்பங் காட்டி எழுச்சி ஊட்டி
ஏமாற்றுக் காட்டும் இயற்கை வெறி
மனைவி மக்கள் சுற்றம் சூழ
பயக்கும் மதுவின் மொத்தக் கணக்கு
கல்வி செல்வம் கருதிய வாழ்க்கை
என்ற வை யெல்லாம் வேண்டாச் சரக்கு
உடலை விட்டு உயிர் பிரிந்தாலோ
நாற்றம் எடுக்கும் பிணம் இவ்வுடம்பு
இதற்குத் தானா இவ்வளவு மதிப்பு
இதை உணர்ந்தாலோ இல்லைத் தவிப்பு
காலம் போகுமுன் கடமையைச் செய்வோம்
கண்ணியமாக வாழ்ந்து தீருவோம்
நல்லது செய்தே நாளைக் கழிப்போம்
நானிலம் போற்ற வாழ்ந்து காட்டுவோம்

— வ. யோகானந்தசிவம்

# கண்ணீர் சிந்தும் சமுத்திரம்

இந்து சமுத்திரமே - நீ
இப்போது கண்ணீர்
சிந்தும் சமுத்திரமோ?
அபலைகள், அகதிகள்
ஆதரவற்று அலைகின்றார்-
உன்
அலை மீது
காப்பாற்றுகின்றோம்
வாருங்கள்
என்பவர்
கட்டிவைத்து சுடுகின்றார்,
கேட்டும் கண்டும்
காதும் கண்ணும்
காய்த்துப்போய் விட்டன!
தீர்க்கின்றோம் பிரச்னை என
நாளாந்தம் தீர்க்கின்றார்
வேட்டுக்களால் தீர்க்கின்றார்;
ஆகாயத்தில் மழை
பொழியும்,
ஆனால் இப்போது
ஆலகால விஷக்குண்டுகள்
பொழிகின்றன.
அலைவரிசைகளில் சொல்வது
அத்தனையும் பொய்
புத்திலிருந்து நாகம் போல்
'புவத்'திலிருந்து வருவது
நஞ்சு!
எத்தனை செய்திகள்
எதனை நம்புவது?
சத்தியம் செத்து!
சரித்திரம் மாய்கிறது
இந்தக்கொடுமை கண்டோ
சிந்துகிறாய் கண்ணீர்.
இந்து சமுத்திரமே - நீ
இப்போது கண்ணீர்
சிந்தும் சமுத்திரமோ?

— கணேஷ்

## 7-வது ஆண்டு நினைவஞ்சலி



**மகேசன் வரதராஜன்**

தோற்றம்: 21-04-1950

மறைவு: 27-04-1979

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்புமறவாத மனைவி,
மகள்,
சகோதர-சகோதரிகள்,
மைத்துனர்மார்,
மைத்துனிமார், உறவினர்,
நண்பர்கள்.

நவாலி. [C-2005]


# இலக்கியச்சந்தி

★ யாழ்வாணன்

## இலங்கை இலக்கியப் பேரவை பரிசு நூல்கள் - 1985

1985ம் ஆண்டு வெளிவந்த இலக்கிய நூல்களுக்கான பரிசு நூல் தெரிவு விரைவில் நடாத்தப்படவுள்ளன.

ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் மேற்படி ஆண்டில் வெளியிட்ட நூல்களின் பிரதியொன்றினை சசிபாரதி, அமைப்புச் செயலாளர், இலங்கை இலக்கியப்பேரவை, 12/5, வைமன் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

★

**அமிர்தகங்கை** நான்காவது இதழ் சித்திரைச் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. ஒவ்செற் அட்டைப்படத்துடன், புதிய பொலிவுடன் வெளிவந்துள்ள இவ்விலக்கிய சஞ்சிகையில் வழமையான அம்சங்களுடன் செம்பியன் செல்வன் எழுதிய **எரியும் பிரச்னைகள்** குறுநாவலும், யாழ். இலக்கிய வட்ட இருபதாவது நிறைவு விழாவையொட்டி இலங்கை இலக்கியப் பேரவை நடாத்திய பரிசளிப்பில் பரிசுபெற்றோர் பற்றிய கட்டுரைகள் அனுபந்தமாகவும் இணைக்கப்பட்டுள்ளன.

முற்போக்கு இலக்கியம் பற்றி... மு. தளையசிங்கம்.

''இலக்கியம் வழிகாட்டும் தெருப்பலகைகள் அல்ல'' என்று எஸ். பொன்னுத்துரை கூறியதாக ஞாபகம். அது உண்மை. ஆனல் நம் முற்போக்கு எழுத்தாளர்கள் அப்படி ஒரு நினைவில் தான் ஒருபலகையைப் போட்டுக் கொண்டுதிரிகிறார்கள். ''முற்போக்கு இலக்கியம்'' பாவம் அவகளுக்குத் தெரியவில்லை. அவர்கள் நிற்கும் பாதை பழையதாக விட்டதென்பது, பஸ் அந்தப்பக்கம் இப்போ போவதில்லை. அதுபுதிய திசையில் புதியபாதையில்ஓடுகிறது. அதைப்புரியாமல் அவர்கள் கத்துகிறார்கள். கூட்டுக்கும் விளம்பரத்திற்கும் அதாவது அதன் பீத்தல்களுக்கும் சொந்தமான குறை அது. காலத்தின் வளர்ச்சியையும் மாற்றத்தையும் அவைபுரிந்து கொள்ளவில்லை. அதனல்தான் காலத்தைத் தங்களோடேயே சதா நிற்கவேண்டுமென்று அவை கத்துகின்றன. அதனல்தான் பெரும்பாலும் கட்சிப் பெட்டிக்குள் வளரும் எழுத்தாளன் வாழ வெளிறிச் செத்துவிடுகிறான். காலத்தின் போக்கை உணர்ந்து வேண்டிய திசையில் விரும்பியமாதிரி வேரை ஓடவிட்டு சூரியனின் ஒளியை முற்றாகப் பயன் படுத்திப் பெரும் விருட்சமாக வளர அவனல் முடிவதில்லை.

அலை: 27.

**சிரித்திரன்** சித்திரை மாத இதழ் வெளிவந்துள்ளது. தர்மத்தின் தராசு பெரும்பான்மை இனத்தின் பக்கமே கனமாக கனத்து நிற்கின்றது'' என்ற ஆசிரிய தலையங்கத்தில் உள்ள வார்த்தைகள் நாட்டின் நிலையை நிதர்சனமாகப் படம் பிடித்துக் காட்டுவதாகவுள்ளது.

★

**நல்லூரில் நூல் நிலையம் கொளுத்தப்பட்டது**

நூல் நிலையங்களை எரிப்பது இன்று மட்டுமல்ல 16 ம் நூற்றூண்டிலும் நடைபெற்றுள்ளது.

தமிழீழத்தை கடைசி மன்னன் சங்கிலியன் ஆண்ட காலம், தமிழர்களின் கலாசாரத்தின் பொற்காலமாகும். இக்காலத்தில் நல்லூர் கட்டநாதர் கோவிலுக்கு அண்மையில் 'சரஸ்வதி மஹால்' எனும் பாரிய நூல் நிலையம் வைத்திய, வாகட காவிய-கவிதை, சரித்திர சோதிட ஏட்டுச் சுவடிகளால் நிறைக்கப்பட்டிருந்தது. ஏகாதிபத்திய பேய்களான போர்த்துக்கீசர் 16 ம் நூற்றூண்டில் யாழ்ப்பாணத்திற்கு படையெடுத்தபோது முதலில் தேடிப்பிடித்து கொழுத்தியது நல்லூர் இராசதானியிலிருந்த சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தைத்தான்.

-மாற்று-

## விளையாட்டுப் போட்டி

(கிளிநொச்சி)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுப் போட்டி இன்று பளை மகா வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அமிர்தலிங்கம் கலந்து கொள்கிறார்.

## சுகாதாரச்சங்க புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கலட்டி கிராம அபிவிருத்தி சுகாதாரச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. டி எம். வேதாரணியம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. டே. போல். உபதலைவர்கள்: திருவாளர்கள் வீ. சின்னப்பு, க. கிருஷ்ணபிள்ளை. செயலாளர்: திரு. பு. கோகுலதீபம். உபசெயலாளர்: திரு. சி குமாரகுருராசா. பொருளாளர்; திரு. பொ. அருந்தவராசா. மேலும் புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாக மூவர்தெரிவுசெய்யப்பட்டனர்.


## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் அருணாசலம் நாகலிங்கம் யேசுதாசன்**

அன்னை மடியில்: 25-09-1918

ஆண்டவனடியில்: 27-04-1985

எங்கள் இதயங்களைப் பிழிந்து எடுத்துக்கொண்டிருக்கும் அன்புத் தெய்வமே! ஐயா! அயராது உழைத்து எம்மையெல்லாம் உயரவைத்த உத்தமரே! இன்னும் சில காலம் எம்நிழலில் இவ்வுலகை நுகராது கடிது இறைவனடியை நாடியது ஏனோ? உங்கள் பிரிவுத் துயர் நீங்கவில்லாத வெறுமை, என்றும் எம்மை ஏங்கவைக்கின்றன. உங்கள் பசுமையான எண்ணங்களும் உமது குரலொலியும் இன்னும் எங்கள் மனதை விட்டகலவில்லை- அகலப் போவதுமில்லை.

தங்கள் நல்லாத்ம சாந்திக்காகதினமும், கணமும் இறைவனை இறைஞ்சுகிறோம்.

தங்கள் பிரிவுத்துயரால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'விஜி மங்கலம்'
சூராவத்தை,
சுன்னகம். C-1908



## முதலாண்டு நினைவஞ்சலி



**அமரர் ஐ. பி. துரைரத்தினம் (ஜே. பி.)**

(முன்னாள் அதிபர்; யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)

கல்விக்க திபதியாய்
கல்லூரி முதல்வராய்
பல்கலை வேந்தராய்
பார்போற்றும்-
மேதையாய்
சொல்லில் வல்லானாய்
சோர்விலா துழைத்தஎம்
நல்வித்தகர் நாமம்
நாளும் நிலைத்துநிற்குமே.

எம்மையும் கல்லூரியையும் வளர்த்து ஆளாக்கி மறைந்த அதிபருக்கு எமது அஞ்சலிகள்.

பழைய மாணவர் சங்கம்,
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

27-04-1986. [C-1966]



## தேவை

யாழ். நகரிலுள்ள எமது நிறுவனத்திற்குக் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்களைத் தொகையாகவோ, சில்லறையாகவோ வழங்குவதற்குத் தகுதியுடையோர் மாதிரிகளுடன் நேரில் வரவும்.

1. வெண்ணிற பனம் குருத்துச் சார்வு.
2. முதல் தரமான பனமட்டை நார்.
3. துப்பரவான கோழி பட்சிகளின் இறகுகள்.

**றொப்பலர் இன்ரநஷனல்,**
இல. 95, பருத்தித்துறை வீதி,
(ஆரியகுளம் முன்பாக)
யாழ்ப்பாணம். (A-462)



## Institute of Technical Studies
## இந்தியா

விசேட வகுப்புகள் ஒவ்வொரு மாதமும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

| | | |
|---|---|---|
| (1) | கம்பியூட்டர் பயிற்சி | 12 மாதம் |
| (2) | டிப்பிளோமா இன் எலக்ரோனிக்ஸ் | 12 மாதம் |
| (3) | எலக்றிசியன் | 6 மாதம் |
| (4) | மெக்கானிக்கல் டிராவ்மன் சிப் | 4 மாதம் |
| (5) | சிவில் டிராவ்மன்சிப் | 4 மாதம் |

இந்தியாவில் A/L 3 பாடங்களுடன் B.Com. படிக்க விரும்புபவர்களும் எல்லா லண்டன் பரீட்சைகளுக்கும் பயிற்சி அளித்து இந்தியாவில் பரீட்சை எழுதுவதற்கு சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும்:

**ஹரி ஹரன் என்றபிறைஸ்**
337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C 2025)



## ஹவுஸ் மெயிட்ஸ்
# குவைத்
## முஸ்லிம் ஹவுஸ் மெயிட்ஸ் உடனடி புறப்பாடு

32 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் மட்டும். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வேறு கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.

பாஸ்போர்ட் 2, 3, 4, 5ஆம் பக்கங்களின் பிரதிகள், முழுமையான போஸ்ட்கார்ட் அளவு புகைப்படம் ஒன்று, 4 பாஸ்போர்ட் அளவு கறுப்புவெள்ளைப் புகைப் படங்கள் சகிதம் நேரில் உடன் வரவும்.

**றேயல் ஏஜென்சி (பிவிடி) லிமிட்டெட்,**
158, புதுச் செட்டித் தெரு,
கொழும்பு - 13.

லைசென்ஸ் இல:- 470
அங்கீகார இல:- ஏ. எல். /470/3/85 (A-622)



## உங்கள் தேவையே எங்கள் சேவை
## உங்கள் பணத்தை மிச்சப்படுத்துங்கள்

றொப்பலர் நிறுவனத்தின் விற்பனைப்பிரிவு விநியோகப் பெண்கள் உங்கள் வீட்டுப்பாவனைப் பொருள்களான உணவு, மருந்துவகைகள், அழகுசாதனப் பொருள்கள், சுத்திகரிப்புப் பொருள்கள் முதலியவைகளை உங்கள் வீட்டுப்படிகளிலேயே நகரத்திலும் பார்க்க குறைந்த விலையில் விநியோகம் செய்கிறார்கள்.

மலர்ந்த முகத்துடன் உங்கள் வீட்டுக்குவரும் எமது பிரதிநிதிகளை வரவேற்று உற்சாகப்படுத்துங்கள். அவர்களிடம் பொருள்களை வாங்குவதால் போக்குவரத்துச் செலவுகள், இராணுவ கெடுபிடுகள், உடல்சலிப்பு முதலியவற்றிற்கு ஆளாகாமல் வீட்டில் உள்ளபடியே மிகுதிப்படுத்த முடியும். உங்கள் தேவைகளை எமது பிரதிநிதிகளிடம் அறியத் தாருங்கள். நாம் சிறந்த முறையில் அவற்றை விநியோகம் செய்ய முடியும்.

வாடிக்கையாளர்களே எமது நிறுவனத்தின் அதிபர்.

**றொப்பலர் இன்ரநஷனல்,**
(A-450) இல. 95, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES

COMPUTER PROGRAMMING COURSE
for
Professionals and School Leavers (6 Months)
Lectures by: Mr N. S. Rajah, B Sc. (Eng) Hons (London). A. M. I. C. E.
Week end courses.
Lectures in A C. Room. Practicals on Apple 11

REGISTRAR,
PATRICIAN INSTITUTE OF
HIGHER STUDIES,

59, St. Patricks Road,
Jaffna. [A 459]



யுவதிகளுக்கு மின்தறியில்
ஊதியத்துடன்

## பயிற்சி வகுப்பு

மின்தறியிலும் கைத்தறியிலும்
பயிற்சி பெற்றவர்களும் பயிற்சி பெற விரும்புவோரும்
30 4–86 காலை 9 மணிக்கு நேர் முகப்பரீட்சைக்கு
சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

★ இடம்பெயர்ந்து அகதிகளாக இங்கு வந்துள்ள பாலர்களுக்கும் எமது தொழிற்சாலையை அண்டிய கிராமங்களில் வசிக்கும் பிள்ளைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

## சீமா சில்க் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்,

பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 23170 (A620)


# இவ்வாரம் எப்படி?

### மேடம்

மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று அம்பலத்திற்கு வரலாம். குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். நண்பர்களும் காலை வாரிவிடுவர் நிதானம் வேண்டும். மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும்.

### இடபம்

குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்தாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தையளிக்கும். எதையும் அலசி ஆராய விரும்புவீர்கள். அடக்கம் வேண்டும். புத்திர வழியால் புகழும உண்டு.

### மிதுனம்

ஆயுத பீடைக்கும் இடமுண்டு. எதிலும் அவதானம் வேண்டும். வெளியிடத்து பயணம் வேதனையைத்தரலாம். எண்ணத்தின் தாக்குதல் நெஞ்சத்தைப் புண்ணுக்கும் பொறுமை வேண்டும்.

### கடகம்

கடமையாற்றும் இடத்தில் ஒத்துழைப்பு கிடைக்கும். கைகொடுத்து உதவுவதற்கு தந்தை முன் வருவார். காரிய சித்தியும் கிட்டும் நீண்ட எதிரிகள் மீண்டும் நண்பர்களாவார்கள்.

### சிங்கம்

முயற்சியால் உயர்ச்சி உண்டு விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாக கிடைக்கும். தொழில் துறையிலும் புதிய உத்வேகம் காணப்படும்.

### கன்னி

இதயப்படுதாவில் இன்பக் கூத்து வாழ்க்கையில் சுபகாரியங்கள் நிறைந்ததாக இருக்கும். கற்றதன் பயன் கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில ஈடுபடுவா. திடீர் வரவுமுண்டு.

### துலாம்

குறை கேட்க நேரிடும். சடையில் தடைகள் தோன்றும். நஷ்டத்திற்கும் இடமுண்டு. உடல நலிவு தோன்றும். பிணிக்கு இடங்கொடாது நடக்கவும். நாவடக்கம் நன்று

### விருச்சிகம்

நிச்சயமற்ற நிலையில் வேதனை. உணவில் அதிக கவனம் செலுத்தவும். அவப்பெயருக்கும் இடமுண்டு. இன சனங்கள் மத்தியில் பூசல்களுக்கும் இடமுண்டு. இவ்வாரம் அவதானம் வேண்டும்.

### தனுசு

அரசியல் வாதிகளுக்குச் சிறப்புண்டு. எக்கருமத்திலும் எண்ணித்துணியவும். அவசரப் போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தைக் கோட்டை விடக் கூடும் இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும்.

### மகரம்

ஆசாரத்தைக் கடைப்பிடிக்கவும். அவசரப்போக்கைத் தவிர்க்கவும். அதிக பேச்சுக்கு இடங்கொடாது நடந்து கொள்ளவும். சகோதரர் ஒருவரின் உடல் நலம் குன்றும். சுகாதாரம் வேண்டும்.

### கும்பம்

இயந்திரங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும். தொழில் துறையில் சோர்விற்கு இடம் உண்டு. பொருளாதாரத்துறை சீரடையும். மாதாவழியில் மகத்தான வரவேற்பும் உண்டு.

### மீனம்

சூழ்நிலையில் நல்லமாறுதல்கள் தென்படும். அமைதியான வாழ்வுடன் தெய்வத்தின் அருளும் உண்டு. புத்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடம் உண்டு. மகிழ்ச்சிகரமான சம்பவங்களும் உண்டு.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**

## இன்று

மாதம்: சித்திரை
திகதி: 14(1986-04-27)
கிழமை: ஞாயிறு
திதி: திருதியை மு. ப. வரை
நக்ஷத்திரம்: அனுசம் காலை 7-40 ன் மேல் கேட்டை





விலை ரூபா 45/= க்கு மேல

- கேசச் சாயத்துறையில் ஒரு நூற்றுண்டு அநுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்படுகிறது.
- இன்று உலகம் முழுவதிலும், இலங்கையிலும் பெரும்பான்மையாேனோர் உபயோகிக்கும் ஒரே கேசச் சாயம்.
- சாயம் பூசியபின் எண்ணெய், சவர்க்காரம் ஷம்பு எதனையும் பயமின்றி உபயோகிக்கலாம்.
- உங்கள் கேசத்திற்குப் பொருத்தமான மூன்று வர்ணங்கள், ஷாம்பு வடிவமுட்பட.

**உங்கள் கேசத்தினைப் பராமரிப்போர்**

ஏக இறக்குமதியாளர்கள்:
TC ராதா டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்
25, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. தொலைபேசி: 36860



# BRITE SOAP WASHES BRIGHT




Net Weight: 130 Grams Price: Rs. 2-25

கைதேர்ந்த தொழிலாளர்களால்
விஞ்ஞானமுறைப்படி தயாரிப்பவர்கள்
TURBOW COMMERCIAL - ALAVEDDY
★ ★ ★ ★
பிரகாசமான சலவைக்கு
பிறைற் சோப்
[A 239]



# GLOBAL IN MADRAS

சென்னையில் குளோபல்

சர்வதேச தொலைபேசி
TELEX I. D. D. Telephone
★ சர்வதேச தொலைபேசி
★ கொம்பியூட்டர் பயிற்சி Computor Training
★ புகைப்படப்பிரதி Xerox Coping
ஆகிய சேவைக்கு நாடுங்கள்

## GLOBAL BUSINESS SYSTEMS (Private) LTD.

(G E E - G E E Complex)
(அண்ணு - சாந்தி தியேட்டர்களுக்கு மத்தியில்)
42/3, அண்ணுசாலை, சென்னை - 600002.
தொலைபேசி எண்: 843387 - 843408 Telex. 41 - 8193 SHAN - IN
குளோபலின் சேவை நாட்டுக்குத் தேவை. A-626

## றெபேர்ட் சேனநாயக்கா காலமானர்

(கொழும்பு)

சமூகசேவையாளரும். பிரபலவர்த்தகருமான திரு. றெபேர்ட்சேனநாயக்கா காலமானர். இவர் இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் மகனும், முன்னுள் பிரதமர் அமரர் டட்லி சேனநாயக்காவின் சகோதரருமாவார். (பி)

## மரக்காலை...

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

அங்கு கடமையிலிருந்த காவலாளியின் வாயைத்துணியிஞல் கட்டி வாங்கொன்றில் படுக்கவைத்து கொள்ளையை நடத்தினர்.

கோயில் ஒன்றிற்குரிய பணமும் இங்கு பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்ததாம். அதுவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளை முடிந்த பின்னர் இப்பொருட்களை ஏற்றிச் செல்ல ஒரு லொறிவந்து நின்றதாம். பின்பு மரக்காலைக் கேற் திறக்கப்பட்டு பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டன

இக்கொள்ளை நடப்பதற்கு முன்பாக ஆயுதங்களுடன் வந்தசில நபர்கள் இங்கு கடமை புரிந்தவர்களிடம், தாம் மரக்காலையைச் சோதனையிடப்போவதாகக் கூறிச் சென்றனராம். பின்பு மறுமுறையும் வந்து அதேமாதிரி கூறிச் சென்றனராம்.

இம் மரக்காலையில் சென்ற பெப்ரவரி மாதமும் இதே போன்ற கொள்ளை நடந்தது குறிப்பிடத்தக்கது. [ஐ]

## கடைசிநேர வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Aka Deck Gx 310D, Audio Amp li Fier Am 2 800, Technic Deck, Hitachi 630 Model, With Three Way Boxes விற்பனைக்குண்டு. Recording Bar உரிமையாளர்களுக்கு விஷேட சலுகை உண்டு. (Sanyo 20 inches Colour T V, Generater 9000 Watts, Honda) அருளானந்தா, C/O ராதா, 21. மேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
(C- 2032)

எம்மிடம் புதிய றெக்கோடிங் பார் அமைப்பதற்குத் தேவையான சகல உபகரணங்கள் விற்பனைக்குண்டு மொத்தமாக எடுப்பவர்களுக்கு முன் உரிமை கொடுக்கப்படும். 2-5-86க்கு முன்னர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். எஸ்.எம்.மீரான் சாஹிப் ரான்ஸ்போட், ஏஜென்ட், 117, மானிப்பாய் ரோட், ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். (C- 2028)
T. P: 23134

எம்பயர் திரையில்
விஜயகாந்—அருணு
நீதி பிழைத்தது

லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Colour)

2வது மாதம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)


## விபரம் அறிய அழைப்பு!

(மட்டக்களப்பு)

மண்டூர் கந்தசுவாமி கோவிலிலும், பழம்பெரும் மாரியம்மன் கோவிலிலும் இடம்பெற்ற உண்மை விபரங்களை அறிந்து கொள்வதற்காக, அவ்வாலயங்களின் நிர்வாகிகளை மட்டக்களப்புபொலிசார் அழைத்துள்ளனர்.

கடந்த 24ம்திகதி மண்டூர்ப் பகுதியில் தேடுதல் வேட்டையில் ஆயுதப்படையினர் ஈடுபட்டிருந்தது தெரிந்ததே. (மா)

## வயோதிபர் சடலம்

[மட்டக்களப்பு]

மன்முனைத்துறைப் பகுதியில் உள்ள மின்கம்பம் ஒன்றுடன் 60 வயது வயோதிபரின் சடலம் நேற்றுக்காலை கட்டி வைக்கப்பட்டிருந்தது.

கணபதி என்னும் பெயருடைய இவ்வயோதிபர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதன்பேரில் அவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயோதிபரின் சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. (மா)

## போராளிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆனல் இலங்கை அரசாங்கம் சமரச முயற்சிகளிலும், பேச்சுவார்த்தைகளிலும் மேற் குறிப்பிட்ட யோசனைகளை உதாசீனம் செய்யுமானல், தமிழ் தீவிரவாதப் போராட்டக்குழுக்களின் 'தனிநாடே முடிந்த முடிவு' என்ற நிலைப்பாட்டை தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரிக்கவேண்டி நேரிடும்" என்ருர்.

(ய. செ.)


### 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



கணபதிப்பிள்ளை சோதிலிங்கம்

ஆண்டவன் படைப்பு:
07-12-1946
ஆழ்பவன் அழிப்பு:
08-05-1985
திதி:
28-04-1986

உண்மையின்
உறைவிடமாய்
வீரத்தின்
பிறப்பிடமாய்
குணக் குன்றாய்
குலவிளக்காய்
குன்றின் மேல் ஒளியாய்
துலங்கி
குழந்தையுடன் சென்ற
நீ
குண்டடிபட்டு வீழ்ந்து
ஓராண்டு
மறைந்தாலும்
உயிருள்ளவரை
மறவோம்.

உன்பிரிவால்வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
தாய், தந்தை,
சகோதர-
சகோதரிகள், மாமி,
மச்சான்மார்,
பெருமக்கள்,
மருமக்கள், உறவினர்,
நண்பர்கள்.

இன்பருட்டி. [C2029]


## இருபோராளிகள் மரணம்

[யாழ்ப்பாணம்]

போராளிகளின் முகாம் ஒன்றை ஆயுதப்படையினர் முற்றுகையிட்ட சமயம் இரு தரப்பினருக்குமிடையே கடும் சமர் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் காலை மூதூரிலுள்ள ஈச்சிலம்பத்தை என்னுமிடத்தில் இந்த நேரடிச் சமர் நடைபெற்றது. ஆயுதப்படையினரில் ஏற்பட்டுள்ள சேசவிபரம் பற்றி எதுவும் அறிவிக்கப்டவில்லை.

### புலிகள் அறிக்கை

இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கை விபரம் வருமாறு: "மூதூரில் உள்ள ஈச்சிலம்பத்தை என்னுமிடத்திலுள்ள எமது முகாம் நேற்று முன்தினம் காலை 165 கறுப்பு சட்டையினரால் முற்றுகையிடப்பட்டசமயம் அவர்களை எதிர்த்துப் போராடிய எமது வீரர்களான மதன் [அருள் தயானந்தரா சா. மூதூர்], கரன் [வெற்றிவேல் கம்பிப்பிள்ளை-மூதூர்] அகிய இருவரும் வீர மரணமடைந்தனர். இவர்களுக்கு எமது வீர வணக்கத்தைச் செலுத்துகிறோம். இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]

## வ.பி. போ. ச.வுக்கு நாளை வரைக்குமே எரிபொருள்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்து சபை டிப்போக்களில் நாளை திங்கட்கிழமைவரை சேவைசெய்யக்கூடியளவு எரிபொருள் மட்டுமே கையிருப்பில் உள்ளதாகவ.பி.போ. ச வட்டாரங்கள் தெரிவித்தன.

எரிபொருள் இன்று அல்லது நாளை எடுத்துவரப்பட்டால் தொடர்ந்து பஸ்சேவை நடைபெறும் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

தனியார் பஸ்கள் மற்றும் வாகனங்கள் எரிபொருள்பெறுவதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக கூறப்படுகிறது. [க]

## யாழ். வந்த...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஆஸ்பத்திரியில் காலந்தாழ்த்தாது சேர்ப்பித்துப் பிரயாணிகள் அனைவரினதும் பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டார்.

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் எதுவித அமளிதுமளியுமின்றியும், முக்கல் முனகலின்றியும் பிஞ்சுக் குழந்தையை அரவணைத்தபடி மயங்கியநிலையில் அப்பெண் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பஸ்ஸிலுள் பிரயாணம் செய்துகொண்டிருந்த பெண்கள் சிலர் முதலுதவி புரிந்து கைத்தாங்கலாக தாயையும் சேயையும் சுமந்துசென்று புத்தளம் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

இதே வேளை இந்த தனியார் பஸ் வண்டிஇப்பிரசவம் காரணமாகவும், இடையில் பரிசோதனைகள் காரணமாகவும் 18 மணிநேர தாமதத்தின் பின்னரே யாழ்ப்பாணம் வந்தடைந்தது. [நா]

## "மண்ணைமீட்ட பின்னரே ஆயுதங்களை கைவிடுவோம்!"

### 'ஈரோஸ்' பாலகுமார்

(கொழும்பு)

"தமிழ் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும் என்று ஜனதிபதி ஜெயவர்த்தன கூறுகிருர் முதலில் அவர் அதைச் செய்யட்டும். தனது படைகளை அவர் விலக்கிக் கொள்ளட்டும். ஆக்கிரமிக்கப்பட்ட எமது நிலத்தை விடுவிக்கவே நாம் ஆயுதம் ஏந்தியுள்ளோம்."

இவ்வாறு ஈழபுரட்சிகர (ஈரோஸ்) அமைப்பைச் சேர்ந்த திரு. பாலக்குமார் சென்னையில் பத்திரிகையாளர் கே. பி சுனில் என்பவருக்கு அளித்த பேட்டியின்போது கூறினர்.

திரு. பாலக்குமார் மேலும் கூறியதாவது'- "ஆயுதங்களைக் கையளித்தால்தான் எமக்கு மன்னிப்புத் தருவதாக ஜனதிபதி ஜெயவர்த்தன கூறுகிருர். இனியும் நாங்கள் இலங்கைக் குடிகளல்ல எமக்கு அவர் மன்னிப்பளிக்க" என்ருர்.

"நாங்கள் கையேந்திய ஆயுதங்கள் எமது மண்ணை மீட்டபின்பே கையிறக்கப்படும் கிழக்கு மாகாணத்தில் சிங்களப் பேரினவாதிகள்; இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்த முனைந்து வருகின்ருர்கள்" என்றும் கூறினர்.

(ய-பி)

## தெல்லிப்பளை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றிரவு 11 மணியளவில் நடந்த மேற்படி கொள்ளை சம்பந்தமாக தெரிவிக்கப்படுவதாவது:

காங்கேசன்துறையில்லங்கா சிமெந்து நிறுவனத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றும் தேவரத்தினம் என்பவரின் வீட்டில் இரவு 11 மணியளவில் நுழைந்த இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய 25பேர் கொண்ட கோஷ்டி அவரது மனைவியிடம் நகைகளைத்தரும்படி கேட்டனராம். இல்லை என்து கூற அவர்கள் தாக்கமுற்பட்டனராம். பொறியியலாளர் தாக்கியதையடுத்து அவருக்குக் கோடரியால் வெட்டினராம். தலையில் படுகாயம் அடைந்துள்ளார்.

இவரது வீட்டில் இருந்து ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான தாலிக்கொடி, அட்டியல், சங்கிலி காப்பு ஆகிய நகைகளையும் 1000 ரூபா ரொக்கத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிட்டனராம்.

அருகாமையில் ஒரு வீட்டில் நடந்த திருமண வைபவத்தில் இருந்தவர்களையும் மேற்படி கோஷ்டி துப்பாக்கிமுனையில் தடுத்து வைத்தனராயினும் ஊர்மக்கள் கூடி குரலெழுப்பியதையடுத்து ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் நேற்று தெல்லிப்பளை யாழ். வீதியிலும், சட்டுவன் தெல்லிப்பளை வீதியிலும், அளவெட்டி தெல்லிப்பளை வீதியிலும் தடைகள் போடப்பட்டு வழிமறிப்புப் போராட்டம் நடந்தது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர்கள் அம்பாறை இராணுவ முகாமுகாமுக்கு நடத்திக் கொண்டு செல்லப்பட்டதாகவும், நீண்டதூரம் நடந்து சென்ற களைப்பினல் மயங்கி விழுந்த இளைஞர்கள் சிலர் பாதையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## ரூபவாஹினி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த 24-ம் திகதி செல்வச் சந்நிதி கோவில் வீதியில் வைத்து ஆயுதப்படையினரால் சுட்டுக்கொலபபட்ட பூசகர் தங்கராசாஐயர், சின்னையா ஐயரின் சடலத்தை நிர்வாணமாக்கவும் கைகள் பின்புறமாகக் கட்டப் பட்ட நிலையிலும் கண்டேன்'

"ரூபவாஹினியில் இறந்தவருக்கள்இருப்பதாக கூறியது பொய்யாகும். உண்மையில் கொலை செய்யப்பட்ட பூசகர் தங்கராசா ஐயர் சின்னையா ஐயரென்று உறுதிப்படுத்தினேன் அத்துடன் சடலத்தை வீதியில் இருந்து அப்புறப் படுத்தியவர்களுள் நானும் ஒருவன்."

"ரூபவாஹினியில், சின்னையா ஐயர் உயிருடனிருப்பதாக, ஈலேந்திரா ஐயரின் முகத்தினை வட்டமிட்டுக்காட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. (வா மா)

## இந்திய அரசில்: பார்த்தசாரதி தலைமையில் உயர்மட்டக் குழு

(புதுடில்லி)

இந்தியமத்திய அரசில் உயர் அதிகாரம் கொண்ட கொள்கை ஆலோசனைக்குழு ஒன்று திரு ஜி. பார்த்தசாரதி தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது

வெளியுறவு அமைச்சகத்தின் கொள்கைத் திட்டமிடல் குழுவுக்குப் பதிலாக இந்தக் குழு செயல்படும் இந்தப் புதிய குழு இந்தியாவின் உலக விவகாரத்துக்கான பின்னணியை மதிப்பீடு செய்வதோடு முக்கிய சம்பவங்கள் தொடர்பாக இந்தியாவின் கருத்துக்கள் பயனுடையதாகவும் ஒருங்கிணைந்த தேசியக் கொள்கையின் அமைப்புக்கு உட்பட்டதாகவும் இருப்பதற்காக அவற்றை பரிசீலனை செய்யும்.

நடப்புக் கொள்கைகளை வகுக்கும் பணியில் குழுவின் தலைவரும் சேர்த்துக் கொள்ளப்படுவார். திரு ஜி. பார்த்தசாரதி 'கபினட்' அந்தஸ்தில் இந்தக் குழுவின் தலைவரகக இருப்பதோடு வெளியுறவு அமைச்சர், உள்நாட்டு பந்தோபஸ்து அமைச்சர், பாதுகாப்பு ஆராய்ச்சி அமைச்சர், மத்திய அமைச்சரவைச் செயலாளர் ஆகியோரும் மற்றும் பேராசிரியர் சுகுநோய் சக்கரவர்த்தி, திரு கே. சுப்பிரமணியம், திரு ஜி.சி சக்சேன, திரு ர. கே. தாமோதரம் ஆகியோரும் இக்குழுவின் உறுப்பினராக இருப்பார்கள். (பி)


### அறிவித்தல்

M. S. M Junaid Optiicans
எம் எஸ் எம். யூனைட்
மூக்குக் கண்ணடி தயாரிப்பாளர்.

எமது ஸ்தாபனத்திற்கு இலங்கையில் வேறு கிளைகள் இல்லை.

144, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-2033)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
ஞாயிற்றுக்கிழமை 27-4-86

# தொண்டமனாறு இராணுவமுகாம் இருக்கும்வரை 'சந்நிதி' பூசைகள் நடைபெறா

## அரச அதிபரிடம் அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

"இராணுவ முகாம் செல்வச் சந்நிதி கோவிலுக்கு அருகில் இருக்கும்வரை அங்கு பூசைகள் நடைபெறாது. பூசகர்களோ வழிபடுபவர்களோ, பொதுமக்களோ அங்கு செல்ல மாட்டார்கள். சேதமடைந்த கோவில் கட்டடங்களின் திருத்த வேலைகளோ, எரிக்கப்பட்ட தேருக்கு பதிலாக புதிய தேர் அமைப்பு வேலைகளோ ஆரம்பிக்கப்படமாட்டாது.

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்தை யாழ். கச்சேரியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுக் காலை சந்நிதி கோவில் சேதம் தொடர்பான நடவடிக்கைக் குழுவினர் சந்தித்து இவ்வாறு தெரிவித்தார்கள்.

இக்குழுவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, முன்னாள் பருத்தித்துறை எம். பி, திரு. கே. துரைரத்தினம், திரு. என். சிவராசா, திரு. கே. முருகமூர்த்தி, திரு. ஆர். பாலசுப்பிரமணியம், திரு எஸ். குமாரசாமி, கோவில் பூசகர்களான திரு பி.பாலேந்திரா, திரு த.பாலசுப்பிரமணியம்,மற்றும் திருமதி எஸ் சண்முகலிங்கம், திருமதி எம். அருணாசலம், திரு. சித்திரவடிவேல், திரு. எம். எஸ் எஸ் தேவராசா ஆகியோர் வந்திருந்தனர்.

பொதுசன தொடர்பு அதிகாரியும், உதவி அரசாங்க அதிபருமான திரு. த. குலசேகரமும் சமூகமளித்திருந்தார்.

முதலில் கோவிலுக்கருகில் உள்ள இராணுவமுகாம் அகற்றப்பட வேண்டுமென்றும், அதன்பின்புதான் அமைதி ஏற்பட்டு, பூசகர்களும், வழிபடுவோரும் கோவிலுக்கு வருவார்கள் என்றும், பூசைகளை நடத்தமுடியுமென்றும் குழுவினர் தெரிவித்தனர்.

கோவில் கட்டடங்கள், எரிக்கப்பட்ட தேர் ஆகியவற்றிற்கு சுமார் 60 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டிருப்பதாக, குழு செயலாளர் திரு. எம். எம் எஸ். தேவராசா தெரிவித்தார். கோவில்மணிக்கான நஷ்டம் இன்னும் மதிப்பிடப்படவில்லை என்றும், நானேமணியின் நஷ்டம் பற்றி முடிவுசெய்யப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

நடவடிக்கை குழுவினர் நாளை திங்கட்கிழமை அரசாங்க அதிபரைச் சந்தித்து சேதம் தொடர்பான மகஜர் ஒன்றைச் சமர்ப்பிப்பார்கள். இதன் பின்னரே இணைம்பதிகாரியை சந்திப்பது பற்றி முடிவுசெய்யப்படும். (க)

## கஷ்டப் பகுதி வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தின் கஷ்டப்பிரதேசங்களிலுள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினர். கலாநிதி ஆ. கந்தையா தெரிவித்துள்ளார்.

கிராகம ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய முற்சேவைப் பயிற்சியை முடித்துக் கொண்ட புதிய ஆசிரியர்களே இந்தக் கஷ்டப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர். (பி)

## நாவற்குடாவில் 250 பேர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பை அடுத்துள்ள நாவற்குடாப்பகுதியை நேற்று அதிகாலைசுற்றிவளைத்த அதிரடிப்படையினர் 250 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 250 பேரும் கல்லடி முகாமில் முகமூடிகள் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர்

இவர்களில் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை. இருந்தும் அடையாளஅட்டை வைத்திருக்காத 10 பேரைத் தவிர ஏனையோர் நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டனர்

விடுவிக்கப்பட்ட ஏனையோர், பிரதி ஞாயிறுதோறும் முகாமுக்கு வந்து கையொப்பமிட வேண்டுமென்பதே அந்தநிபந்தனை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (மா)

## பலாலி விஸ்தரிப்பு:— விசேட நிவாரண பத்திரங்கள் தயார்

[மாவிட்டபுரம்]

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டு வெளியேறிய 300கூலித் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க விசேட பத்திரங்கள் தயார் நிலையிலுள்ள போதும் எவரும் பத்திரங்களைப் பெறவில்லையாம். ஆகவே உடன்வந்து பெறும்படி வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் இராசரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டு வெளியேறிய 300 கூலிவேலை செய்யும் தொழிலாளர் குடும்பங்களுக்கு உடனடி நிவாரணமாக 2 மாதத்திற்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான பத்திரங்களுக்குதயார் செய்யப்பட்டுள்ளன

மயிலிட்டி வடக்கு] மயிலிட்டி தெற்கு, பலாலி கிராம சேவையாளர் பிரிவில உள்ள மேற்படி குடும்பங்களை உடன் வந்து பத்திரங்களைப்பெற்று அத்தியாவசிய உணவுப் பொருட்களை ப. நோ. கூ சங்க கிளைகளில் பெறும்படி கேட்கப்பட்டுள்ளது

உடனடியாக கிராம சேவையாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது

## வவனியா பஸ்நிலையத்தில் சூடு:ஒருவர் அதிர்ச்சி மரணம்

(வவனியா)

வவனியா இலங்கை வங்கியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவத்தையடுத்து வவனியா பஸ் நிலையத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் பாதிக்கப்பட்டனர்.

பாதிப்புக்குள்ளானவர்களில் ஒருவர் வவனியா ஆஸ்பத்திரியில் காலமானார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது இவரின் மரணம் ஒரு அதிர்ச்சி மரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

வவனியாவைச் சேர்ந்த கனகசூரியன் (39 வயது) என்பவரே அதிர்ச்சி மரணத்திற்குள்ளானவர்

மாணமான கனகசூரியன் முல்லைத்தீவுக்குச் செல்வதற்காக பஸ் நிலையத்தில் நின்றலாகவும், துப்பாக்கி வெடிச்சத்த கேட்டபோது பஸ்நிலையத்தில் நின்ற மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடியதாகவும், தெரியவருகிறது.

மீன்பிடித் தொழிலாளியான கனகசூரியனின் சடலம் வவனியா ஆஸ்பத்திரி பிரேதவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (வா)

## இரண்டரை லட்சம் பெறுமதியான பொருள்கள் கொள்ளை

(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் உள்ள ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் மாதிரிக்கடையிலிருந்து சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு இக்கொள்ளை சம்பவம் இடம் பெற்றது.

இக்கொள்ளைச் சம்பவத்தின் போது துப்பாக்கி வேட்டு சத்தம் தொடர்ச்சியாகக் கேட்டது. (மா)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து - நாகராசா (துரை)

சண்டிலிப்பாய் - கல்வளையைச் சேர்ந்த சரவணமுத்து நாகராசா 22-4-86ல் காலமாகிவிட்டார் அன்னார் திருமதி விஜயலட்சுமி சிவசந்திரன் (விரிவுரையாளர் யாழ் பல்கலைக் கழகம்), சொர்னலட்சுமி (ஆசிரியை சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற சூரியகுமார் (கணக்காளர்), சிறீஸ்கந்தராசா (ஜேர்மனி), நாகலட்சுமி (ஆசிரியை, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசந்திரன் (Divisional Pharmacist- S T. B C. கொழும்பு), விமலநாயகி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், கோமதி, அபிராமி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-4-86 ல் நடைபெற்றதென்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்வதுடன் உரியநேரத்தில் அனைவருக்கும் அறிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம்

இப்படிக்கு,
மனைவி, பிள்ளைகள்,
(C 2030)

## மரண அறிவித்தல்

### சங். சகோதரி மேரி விசிற்றேஷன்

சங். சகோதரி மேரி விசிற்றேஷன் 26-04-86இல் இறைவனடி சேர்ந்துவிட்டார். இறுதிச் சடங்குகள் மயிலிட்டி புனித சூசையப்பர் மடத்தில் 27ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெறும் மாகாணத் தலைவி, திருக்குடும்ப மாகாண இல்லம், யாழ்ப்பாணம். [C 2034[

### சங்கரப்பிள்ளை கந்தையா [Fancy]

சுன்னாகம் தெய்வா எலக்ரிக்கல்ஸ் உரிமையாளர் சங்கரப்பிள்ளை கந்தையா காலமானார். அன்னார் புஷ்பராணியின் அன்புக் கணவரும், முரளீதரன் [W. Germany] ஞானனந்தன் - கார்த்திகாயினி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [27-4-86] ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்று, 3 மணியளவில் ஏழாலை குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

[C 2016] தகவல்: S. கனகராசன்.

### இராமலிங்கம் இராமதாஸ்

புலோலி கிழக்கு, தும்பளைவீதி, பருத்தித்துறையைச் சேர்ந்த இராமலிங்கம் இராமதாஸ் அவர்கள் 23-4-86 புதன்கிழமையன்று அனுராதபுரத்தில் அகால மரணமானார். இவர் பாக்கியலஷ்மியின் அன்புக் கணவரும், சிவதீபனின் அன்புத்தந்தையும், டரியளம் என்ரப்பிறைஸஸ் உரிமையாளர் இ. நடராஜாவின் மைத்துனருமாவார். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தகவல்: குடும்பத்தினர்.

[C 2017]

### நாகேந்திரர் கந்தையா

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்தவரும், இலங்கை-சேயிலைப் பிரசார சபையின் இளைப்பாறிய உத்தியோகத்தருமான திரு நாகேந்திரர் கந்தையா காலமானார். இவர் இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், திருமதி கோணேஸ்வரி சுந்தரமூர்த்தி, திருமதி யசோதரா இராசைா ஆகியோரின் தந்தையும், சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி (கனடா), அருளம்பலம் இராசையா [U K] ஆகியோரின் அன்பு மாமனாரும், சைலஜா, கிரிஜா, ரமணன், வேணன் ஆகியோரின் பேரனுமாவார் இறுதிக் கிரியைகள் கோண்டாவில் நவரத்தினராசா வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் 27-4-86 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும் பூதவுடல் தகனத்துக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

நவரத்தினராசா வீதி,
கோண்டாவில்.
[C 2031]

### தம்பாப்பிள்ளை சரவணமுத்து

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த தம்பாப்பிள்ளை சரவணமுத்து 26-04-86இல் காலமானார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், சிவராசா (பொறியியலாளர், கயானா), லோகேஸ்வரன் (டொக்யாட் லிமிற்றட்), சாந்தி கிருபாகரன் (மண் பரிசோதகர், றந்தனிகல), சருபானந்தன், நித்தியானந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சவுந்தரகுமார் (நில அளவையாளர், திருகோணமலை), சிவபூரணி (கயானா), சாந்தரூபி ஆகியோரின் அன்பு மாமனும், சுஜீவின் அன்புப்பேரனும், திருமதி செல்லம்மா நவரத்தினம், காலஞ்சென்ற நல்லிநாதன், வன்னியசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார், ஈமக்கிரியைகள் இன்று (27-04-85) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும, தகவல்: மனைவி, பிள்ளைகள்,

"சிவகிரி வாசா"
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (C 2015)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126,